வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 26.04.2023 புதன்கிழமை இதழ் : 138 பக்கங்கள் : 16

## அன்னை பூபதி, முள்ளிவாய்க்கால்
# நினைவேந்தல்களை கைப்பற்ற வேண்டும்
### கஜேந்திரகுமார் எம். பி. சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஏப். 26
அன்னை பூபதி, தியாகி திலீபன், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்களை நாம் கைப்பற்ற வேண்டும். இந்த நினை வேந்தல்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டும்தான் நினைவேந்த வேண்டும் என்று கூறியிருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார்

15



# வடக்கு - கிழக்கு இயல்பு இழந்தன!
## மட்டக்களப்பில் முஸ்லிம்கள் பேராதரவு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 26
**தமிழ்த் தேசிய கட்சிகளின் அழைப்பின் பேரில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட பொது முடக்கப் போராட்டத்தால் மக்களின் இயல்பு வாழ்வு முற்றாகப் பாதிக்கப்பட்டது.**

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை எதிர்த்தும் தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பு மற்றும் மரபுரிமைகள் அழிப்பைக் கண்டித்தும் ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து பொது முடக்கத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன.

**யாழ்ப்பாணத்தில்...!**
பொது முடக்கப் போராட்டத்தால் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மாநகரம், சுன்னாகம், சங்கானை, சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்துறை, நெல்லியடி என்று முக்கிய நகரங்கள் மற்றும் ஏனைய இடங்களிலும் வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தைகள், தனியார் நிறுவனங்கள் என அனைத்தும் மூடப்பட்டிருந்தன.
தனியார் போக்குவரத்து

15

## மின்னல் தாக்கி பெண் மரணம்!

மன்னார், ஏப். 26
சீரற்ற காலநிலையின் போது ஏற்பட்ட மின்னல் தாக்கத்தால் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.
மன்னார் - மடு - கீரிசுட்டான் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், பத்மநாதன் தெய்வானை (வயது - 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

## மாகாண சபைகள் தேர்தல் திருத்த சட்டம் பாராளுமன்றில்!
### சுமந்திரன் சமர்ப்பிப்பு; மனோ வழிமொழிவு

கொழும்பு, ஏப். 26
பழைய தேர்தல் முறையில் மாகாண சபைகள் தேர்தலை உடனடியாக நடத்தக் கூடியவாறான தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை தமிழரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தனிநபர் பிரேரணையாக சபையில் சமர்ப்பித்தார்.
பிரதி சபாநாய

15

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கை ஆயர் பேரவையிடம்

கொழும்பு, ஏப். 26
உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின்

15

## ஹர்த்தால் வெற்றிபெற ஆதரவளித்தோருக்கு நன்றி!
### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26
நேற்று செவ்வாய்க்கிழமை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட முழுமுடக்க போராட்டம் முழுமையான வெற்றியைப் பதிவு செய்துள்ளது. இதற்கு ஆதரவளித்த அனைவருக்கும் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்த தமிழ்த் தேசிய பரப்பில் அரசியல் பணியாற்றிவரும் ஏழு கட்சிகளும் கூட்டாக தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளன.
இதுகுறித்து

15

## ஓ. எல். பரீட்சையை நடத்தாது சகலரையும் தரம் உயர்த்துக!
### டலஸ் அழகப்பெரும ஆலோசனை

கொழும்பு, ஏப். 26
இந்த வருடம் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதை பரிசீலியுங்கள். எனினும், பரீட்சை நடத்துவதற்கு பதிலாக அனைத்து மாண

15



## ஏ. எல். பரீட்சை விடைத்தாளை திருத்த ஆசிரியர்கள் தயார்!

கொழும்பு, ஏப். 26
உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை எந்த நேரத்திலும் திருத்துவதற்கு தயார் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.
இதுவரை 12 ஆயிரம் ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர் என்று அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
உயர்தரப் பரீட்

15

## கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை மே மாதத்தில் ஆரம்பிக்கப்படும்!

கொழும்பு, ஏப். 26
சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டு ஒப்பந்தத்துக்கு அமைய கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பிக்க வேண்டியுள்ளது.
இதற்கமைய சர்வதேச நாணய நிதியம் , உலக வங்கி , மத்திய வங்கி , நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினரால் கடன் மறுசீரமைப்புக்கான திட்டமிடல்

15

## ஹர்த்தால் காரணங்களுக்குத் தீர்வு இல்லையேல் சட்டமறுப்பு போராட்டம்!
### சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 26
உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் எதிர்ப்புகள் வலுப்பெற்றுள்ளன. இதனால், பாராளுமன்றத்துக்கு சட்டமூலத்தை சமர்ப்பிப்பது தாமதப் படுத்தப்பட்டுள்ளது. தாமதப்படுத்துவதை காட்டிலும் சட்டமூலத்தை முழுமையாக இரத்து செய்வது அரசாங்கத்துக்கு சாதகமாக அமையும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற ஹர்த்தாலுக்கான காரணிகளுக்கு தீர்வு காணாவிட்டால்

15

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தெரிவுக் குழு விசாரணை அவசியம்!
### ஆளும் - எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 26
நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் பாராளுமன்ற தெரிவு குழு ஒன்றை நியமிக்குமாறு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்கள்.
நேற்று பாராளுமன்றம் கூடியபோது எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் எழுப்பப்பட்டது.
இதன்போது, நட்டஈடு கோரி அரசாங்கம் சிங்கப்பூர் நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இலங்கையின்

15

## இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவர் லண்டனிலிருந்து தொடர்பு கொண்டார். அவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். தமிழ்த் தேசிய அரசியலில் அதிக அக்கறை கொண்டவர். தொடர்பில் வந்ததும், அவர் கேட்டார்:

“ஏழுகட்சிகள் நடாத்திய கடையடைப்பு போராட்டம் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு செய்தியை பார்த்தீர்களா?”, என்று.

அதுதான் மிக “வெற்றிகரமாக நடந்து முடிந்துவிட்டதே”, என்றேன்.

“அது வெற்றிகரமாக முடியும் என்பது தெரிந்தது தானே. அதுவல்ல, அந்த ஊடகவியலாளர்கள் மாநாட்டை நடத்திய ஏழு கட்சிகளின் தலைவர்களின் படங்களை பார்த்திருப்பீர்கள்தானே?”, என்று திரும்பக் கேட்டார் நண்பர்.

“ஓமோம் அதில் என்ன?”, என்றேன். “அதில் ஒன்றும் இல்லைத்தான். ஆனால், தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று சொல்லிக்கொள்ளும் கட்சிகள் எல்லாம் ஏன் யாழ்ப்பாணத்தவர்களின் தலைமையில்தான் இயங்க வேண்டும் என்று ஏதாவது தமிழ்த் தேசியச் சட்டம் இருக்கின்றதா?”, என்று கேட்டார்.

அப்போதுதான் அவர் எதைப்பற்றிக் கேட்கிறார் என்பது புரிந்தது.

“வடக்கும் கிழக்கும்தான் தமிழர்களின் தாயகம். அது இணைந்த தீர்வுதான் வேண்டும். அதைத்தவிர வேறு எந்தத் தீர்வையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று அடம்பிடிக்கும் நமது தலைவர்கள், தமது கட்சியின் தலைமைப் பதவியை மட்டும் மட்டக்களப்பானுக்கோ? அம்பாறையானுக்கோ விட்டுக் கொடுக்க மாட்டார்கள்”

-நண்பர் தனது மனக்குமுறலை கொட்டித்தீர்த்தார்.

“இப்படி பேசினால் இவன் பிரதேசவாதம் பேசுகின்றான் என்பார்கள். அதனைப் பேசுவதால் அது பிரதேசவாதமாகிவிடாது. இன்று கிழக்கில்தான் தமிழ் தேசியத்தின் தேவை அதிகமாக இருக்கின்றது...”, அவரது ஆத்திரத்தில் நியாயம் இருப்பது தெரிந்தது.

அவரை சமாதானப்படுத்துவதற்காகச் சொன்னேன், “அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, யாழ்ப்பாணத்து நண்பர் ஒருவர் என்ன சொன்னார் தெரியுமா? இவர்களின் பிள்ளைகளோ, ஏன் பேரப் பிள்ளைகளோ வடக்கு - கிழக்கில் ஏதாவது பாடசாலையில் படிக்கிறார்களா? அல்லது ஏதாவது கடையாவது நடத்துகின்றார்களா? இல்லையே, அப்படியிருக்கும் போது கடைகளை மூடுவதாலோ, பாடசாலைகளை மூடுவதாலோ அவர்களுக்கு எந்த நஷ்டமும் இல்லைத் தானே? என்றுதான் கேட்டார். ஆனால் நீர், கிழக்கு தலைவர்கள் எவரும் கட்சித் தலைவர்களாக இல்லை என்ற உமது ஆதங்கத்தை தெரிவித்திருக்கிறீர்”, என்றேன்.

அது அல்ல, தமிழரசுக் கட்சியில் அடுத்த தலைவருக்கான சண்டை நடந்து கொண்டிருக்கின்றது. மாவைக்கு பதிலாக அடுத்த தலைவராக யார் வருவது என்பதில் மல்லுக்கட்டுகிறார்கள், இதில்கூட ஒரு கிழக்கு மாகாணத்தவனால் போட்டிபோட முடியவில்லை.

நீண்டகாலமாக கட்சித் தலைவராக வடக்கு மாகாணத்தவர் இருந்தால் செயலாளராக கிழக்கு மாகாணத்தவரே இருந்து வருவது வழமையாக எழுதப் படாத விதியாக தமிழரசு கட்சியில் இருந்து கொண்டிருக்கின்றது. ஆனால், இப்போது வடக்கில் சுமந்திரனா? சிறீதரனா தலைவராவது என்பதில் இருவரும் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும்போது, இவர்கள் இருவரையும் தவிர்த்து சீ. வீ. கே. சிவஞானத்தை தலைவராக்கலாம் என்றுதான் பேசுகிறார்களே தவிர, மட்டக்களப்பின் பொன். செல்வராசாவையோ யோகேஸ்வரனையோ தலைவராக்கினால் என்ன என்று யாரும் எழுதியாதாகவோ - கேள்வி கேட்டதாகவோ தெரியவில்லை.

கட்சியில் ஒரு சிலரின் தனித்த முடிவுகளால் கூட்டமைப்பிலிருந்து வெளியே வந்த தமிழரசு கட்சியின் இன்றைய நிலைக்கு யார் காரணம் என்பதை கட்சியின் பெரும்பாலானவர்கள் உணர்ந்துவிட்டதாகவே தெரிகின்றது. அதனால்தான் அண்மையில் வெளிநாட்டுக் கிளையினர் சூம் செயலி ஊடாக நடத்திய கட்சிக் கூட்டத்திலும் புதிய தலைவர் நியமனம் தொடர்பாகவே ஆராய்ந்திருக்கிறார்கள்.

இனியாவது ஏதாவது மாற்றம் நடக்கின்றதா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.!

- ஊர்க்குருவி

## வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் பதிவுகள்...




யாழ்ப்பாணம்


சாவகச்சேரி


வடமராட்சி


முல்லைத்தீவு


கிளிநொச்சி


வவுனியா



திருகோணமலை


மட்டக்களப்பு



மன்னார்

ஈழநாடு
Eelanadu
26.04.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பௌத்தத்தின்மீதான பா.ஜ.கவின் ஈடுபாடு?

சர்வதேச பௌத்த மகாநாடு கடந்த 20, 21ஆம் திகதிகளில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் புதுடில்லியில் இடம்பெற்றது. "தற்கால சவால்களுக்கான பதில் : தத்துவமும் நடைமுறையும்" என்னும் தலைப்பில் மேற்படி மகாநாடு இடம்பெற்றது. புத்தரின் சிந்தனைகளை முன்கொண்டு செல்வதில் இந்தியா அர்ப்பணிப்புடன் இருப்பதாக பிரதமர் மோடி தெரிவித்திருந்தார்.

நரேந்திர மோடி இலங்கைக்கு வந்தபோது பௌத்த மதத் துறவிகளுக்கு பெரும் கௌரவமளித்திருந்தார். அவர்களின் காலில் விழுந்து வணங்கியிருந்தார். இந்து மதத் துறவிகளுக்கு வழங்கும் கௌரவத்தை பௌத்த பிக்குகளுக்கு வழங்கியிருந்தார். ஆனால், மோடியின் அணுகு முறைக்கு பின்னாலுள்ள உண்மையான விடயம் வேறு.

அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக உள்நாட்டுக்குள் இந்துத்துவா தேசியவாதத்தை உச்சமாக கையாளும் அணுகுமுறையையே பா. ஜ. க. தலைமையிலான அரசாங்கம் கையாண்டு வருகின்றது. அதே வேளை, இந்தியாவின் அயல்நாடுகளை கையாளும் வெளிவிவகார அணுகு முறையில் பௌத்தத்தை ஒரு துருப்புச் சீட்டாக மோடி அரசாங்கம் கைக்கொள்ள முற்படுகின்றது. அதாவது, பா. ஜ. க. இந்தியாவைப் பொறுத்தவரையில் பௌத்தம் ஒரு மென் இராஜதந்திர கருவியாக இருக்கின்றது. இதன் மூலம் நேபாளம், இலங்கை போன்ற நாடுகளை கையாள முடியுமென்று மோடி இந்தியா கருதுவதாகத் தெரிகின்றது.

இது நடைமுறையில் எந்தளவு வெற்றிகரமானதென்னும் கேள்விகள் இருந்தாலும்கூட பா. ஜ. க. இந்தியா இதனை ஒரு கருவியாகக் கையாளும் கொள்கை நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றதென்பது வெள்ளிடைமலை. ஆனால், இலங்கையின் சிங்கள - பௌத்தர்கள் புத்தரின் போதனைக்கு ஏற்ப இல்லையென்பதுதான் உண்மை. இந்த விடயம் தொடர்பில் பா. ஜ. க. கரிசனை கொள்கின்றதா? வடக்கு, கிழக்கில் இந்துத்துவா அணுகுமுறையை கைக்கொள்ள முடியுமென்று நம்பும் ஈழத்து சிவசேனையின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் போன்றவர்கள் இந்த உண்மையை எந்தளவுக்கு பா. ஜ. கவின் தலைவர்களின் கரிசனைக்குக் கொண்டு சென்றிருக்கின்றார்கள்? யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்லும் பா. ஜ. கவின் தமிழ்நாட்டு தலைவர் அண்ணாமலை எந்தளவுக்கு இந்த விடயங்களைப் புரிந்து வைத்திருக்கின்றார்?

அண்மையில், தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த கிறிஸ்தவ மதப் பிரசார குழுவினரை தடுத்து நிறுத்தியதை ஆர். எஸ். எஸ். அமைப்பின் உத்தியோகபூர்வ பத்திரிகையான "ஓகனைசர்" பாரட்டியிருக்கின்றது. ஆனால், மறுபுறம் வடக்கு - கிழக்கிலுள்ள இந்துக் கோவில்களின் பாதுகாப்பு மற்றும் உயர்ச்சி தொடர்பில் இந்துத்துவா தரப்புகள் பிரதான கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

அவ்வாறாயின், ஈழத்து இந்துக்களையும் இலங்கையின் சிங்கள - பௌத்தர்களையும் ஒரேமாதிரியாகவே பா. ஜ. க. நோக்குகின்றதா? ஏனெனில், இந்துக் கோவில்கள் தொடர்பில் அண்ணாமலை போன்றவர்கள் பிரத்தியேக கவனம் செலுத்தியதற்கு சான்றில்லை. வெறுமனே கிறிஸ்தவ மதமாற்றிகளை இலக்கு வைத்து செயல்படுவதன் மூலம் மட்டும் இந்துக்களின் இருப்பை பாதுகாத்துவிட முடியுமா?

வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரையில், இந்துக்களின் பாரம்பரிய இடங்களை பாதுகாப்பதென்பது தமிழ் மக்களின் இருப்புடன் தொடர்புபட்டது. தமிழ் மக்களின் இருப்பையும் இந்துக்களின் அடையாளங்களையும் பிரித்து நோக்க முடியாது. வடக்கு - கிழக்கின் தொல்பொருள் சான்றுகள் என்பது, அடிப்படையில் இந்துக்களின் வாழ்வியலோடு தொடர்புபட்ட ஒன்றுதான். இதனை சிலர் சைவமென்றும் அடையாளப்படுத்திக் கொண்டாலும்கூட உலகளாவிய கண்ணோட்டத்தில் இந்துக்கள் என்னும் அடையாளத்தின் ஊடாகவே ஈழத்தின் பெரும்பான்மையான தமிழ் மக்கள் நோக்கப்படுவர். இந்துக்கள் விடயத்தில் இந்தியாவின் பிரதான கரிசனையை ஈர்க்க முடியாவிட்டால் இந்துத்துவா அணுகுமுறைக்கான நியாயம் பலவீனமான ஒன்றாகவே நோக்கப்படும்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் சாமர குணசேகரவே இலஞ்சம் பெற்றார்!

## பாராளுமன்றில் அறிவித்தார் நீதி அமைச்சர்

*கொழும்பு, ஏப். 26*

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனம் மீதான வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைளை தடுப்பதற்காக 250 மில்லியன் டொலரை இலஞ்சமாக சாமர குணசேகர என்பவரே பெற்றுக்கொண்டதாக தகவல் கிடைத்துள்ளது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஆனால், சாட்சியம் கிடைக்கவில்லை. எனவே, பொலிஸார்தான் உண்மையை கண்டுப்பிடிக்க வேண்டும் என்றார்.

அத்துடன், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்கான நஷ்டஈடு தொடர்பான வழக்கு தோல்வியடைந்தால் அதன் பொறுப்பை சுற்றாடல் தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவே ஏற்க வேண்டும் எனவும் அவர் குற்றம்சாட்டினார்



பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

2021ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளாகிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் கடல் வளங்களுக்கும் கடல் வாழ் உயிரினங்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புக்கான நஷ்டஈடு தொடர்பில் துறைசார் நிபுணர்கள் இடைக்கால அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

தேசிய மற்றும் சர்வதேச ஆய்வு மாதிரிகளுக்கு அமைய கப்பல் விபத்தி னால் ஏற்பட்ட பாதிப்புக் களுக்கு 640 கோடி டொலர் நஷ்டஈடு பெற்றுக்கொள்ள முடியும் என இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# நெடுந்தீவில் ஐவர் கொலை; சந்தேக நபருக்கு மறியல்!

*யாழ்ப்பாணம், ஏப். 26*

நெடுந்தீவில் ஐந்து முதியவர்களை படுகொலை செய்ததுடன், 100 வயதான மூதாட்டிக்கு கடும் காயங்களை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைதானவரை எதிர்வரும் மே 9ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஜெ. கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.

நெடுந்தீவில் கடந்த சனிக்கிழமை இறங்குதுறை அருகே வீடொன்றில் ஐந்து முதியவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன. 100 வயதான மூதாட்டி படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை சந்தேகநபரை புங்குடுதீவில் வைத்துக் கைது செய்தனர். அவரிடமிருந்து 26 பவுண் நகைகள், பணம் என்பவற்றைக் கைப்பற்றினர். தொடர்ந்து நீதிமன்ற அனுமதியில் இருநாள் காவலில் எடுத்தும் விசாரித்தனர்.

அந்த காவல் காலம் நேற்று முடிவடைந்ததைத் தொடர்ந்து சந்தேகநபரை நேற்று நீதிமன்றத்தில் பொலிஸார் முற்படுத்தினர். இதன் போதே அவரை எதிர்வரும் மே 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டது.(ஐ)

# கனடிய எழுத்தாளர் வீணைமைந்தனின் 3 நூல்கள் யாழ்ப்பாணத்தில் வெளியீடு!

*யாழ்ப்பாணம், ஏப். 26*

கனடிய எழுத்தாளர் வீணைமைந்தனின் மூன்று புதிய நூல்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக அரங்கில் வெளியிடப்படவுள்ளது.


"மண்ணும் மனசும்", "மறக்கத் தெரியாத மனசு", "தமிழ் சினிமாவில் மகாகவி பாடல்கள்" (உதயனில் வெளியான தொடர் கட்டுரைகள்) ஆகிய மூன்று நூல்களே வெள்ளிக்கிழமை வெளியிடப்படவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், இலக்கிய படைப்பாளிகள் பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்.

அத்துடன், கனடிய பல்லின பத்திரிகையாளர் கழக சிரேஷ்ட உப தலைவர், ரொறன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் தலைவர், கனடா "உதயன்" பிரதம ஆசிரியருமான ஆ. என். லோகேந்திரலிங்கம் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

கடந்த 2015இலும் வீணைமைந்தனின் மூன்று நூல்கள் பல்கலைக்கழக வளாகத்தில் வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வாகனத்தை சீர் செய்வீர்கள். இரட்டிப்பு லாபம் உண்டு. சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**
கடந்த 2 நாட்களாக மன உளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள். அவமானங்கள் வந்து நீங்கும். சங்கடங்கள் சமாளிக்க வேண்டும்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிப்பீர்கள். வழக்கில் அலட்சியம் வேண்டாம். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும்.

**சிம்மம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். எண்ணங்கள் நிறைவேறும் நாள்.

**கன்னி**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரம் தழைக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். பணம் தாமதமாக வரும் சக ஊழியர்களுடன் அளவாக பழகுங்கள். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நன்மைகள் நடக்கும் நாள்.

**மகரம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பிரபலங்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் பற்று உயரும். உங்களின் புது முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வேற்றுமதத்தவர் உதவுவார்கள். வியாபாரத்தில் புது வகையான தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும்.

**மீனம்**
தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். வாகனம் மற்றும் வீட்டை சரி செய்வீர்கள். புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சக ஊழி யர்கள் உங்களை ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

# திருமண நிகழ்வில் மதுபானம் தமிழக அரசின் அறிவிப்பு இரத்து!

சென்னை, ஏப். 26

திருமண நிகழ்வுகளில் மதுபானம் பரிமாறும் வகையிலான தமிழக அரசின் அறிவித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் திருமண நிகழ்வுகள் மற்றும் விளையாட்டு மைதானங்களில் மதுபானம் பரிமாறுவதற்கு அனுமதியளித்து நேற்று முன்தினம் அரசிதழ் மூலம் வெளியிடப்பட்டது. இந்த அறிவித்தலுக்கு தமிழகம் முழுவதும் கடும் எதிர்ப்புகள் கிளம்பின.

இந்த நிலையில், திருமண மண்டபங்களில் சர்வதேச, இந்தியளவிலான மாநாடுகளின்போதே மதுபானம் பரிமாற அனுமதி வழங்கப்படும் என்று விளக்கமளிக்கப்பட்டது. ஆனாலும், எதிர்ப்புகள் வலுவடைந்தன.

இந்த நிலையில், திருமண மண்டபங்களில் மதுபானம் பரிமாறுவதற்கான அனுமதியை இரத்துச் செய்து திருத்தப்பட்ட அரசிதழ் நேற்று தமிழக அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது.

# பழனிசாமி நம்பிக்கை துரோகி பன்னீர்செல்வம் குற்றச்சாட்டு!

திருச்சி, ஏப். 26

ஜெயலலிதா என்னை 2 முறை முதல்வராக நியமனம் செய்தனர். 3ஆம் முறை வி. கே. சசிகலா என்னை முதல்வராக்கினார். அவர்கள் திரும்ப கேட்டபோது, நான் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். அதுபோலவே பழனிசாமிக்கும் பதவி கொடுத்தார். ஆனால் அவரோ சசிகலாவைப் பார்த்து நாய் எனக் கூறுகிறார். எவ்வளவு பெரிய நம்பிக்கை துரோகி. வரலாறு மன்னிக்குமா? இப்படி கேள்வி எழுப்பியுள்ளார் ஓ. பன்னீர்செல்வம்.

பன்னீர்செல்வம் (ஓ. பி. எஸ்) அணி சார்பில் முப்பெரும் விழா புரட்சி மாநாடு திருச்சியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதில் பேசிய ஓ.பன்னீர்செல்வம், “கட்சியின் ஆணிவேராக இருக்கக்கூடிய தொண்டர்கள்தான் தலைமைப் பொறுப்புக்கு வர வேண்டும் என்று சட்ட ரீதியிலான உரிமையை எம். ஜி. ஆர். வழங்கினார். அவருக்குப் பின் வந்த ஜெயலலிதாவும் அதை உறுதிபடுத்தினார். இவர்கள் கடந்த 50 ஆண்டுகளாக, இந்த சட்ட விதிகளின்படியே கட்சியை வழிநடத்தி 30 ஆண்டுகள் தமிழகத்தை ஆட்சி செய்யும் உரிமையை மக்களிடத்திலிருந்து பெற்றனர். அரசியல் வரலாற்றில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்த பெருமையைப் பெற்ற ஒரே கட்சி அ. தி. மு. கதான்.

எம். ஜி. ஆர் மறைவின்போது 16 இலட்சம் தொண்டர்களுடன் இருந்த இக்கட்சியின் பொதுச் செயலாளராக பொறுப்பேற்ற ஜெயலலிதா, 30 ஆண்டுகள் வேதனைகள், சோதனைகளை தாங்கி, எதிர்க்கட்சிகளை சமாளித்து பின்னாளில் 1.5 கோடி தொண்டர்களைக் கொண்ட கட்சியாக மாற்றினார். தொண்டர்கள்தான் கட்சியின் உயிர்நாடி, கட்சியின் ஆணிவேர் எனக் கருதினார். யாராலும் வெல்ல முடியாத இயக்கமாக வழிநடத்தினார். அவரைத்தான், கட்சியின் நிரந்தர பொதுச் செயலாளர் என்று உண்மையான பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றினோம்.

ஆனால், அதற்குப் பின்னால் வந்த அரசியல் வியாபாரிகள், நயவஞ்சகர்கள், நம்பிக்கை துரோகிகள் அந்தத் தீர்மானத்தையே மாற்றினர். ஜெயலலிதாவுக்கு கொடுக்கப்பட்ட நிரந்தர பொதுச்செயலாளர் அந்தஸ்தை இரத்து செய்த நயவஞ்சகர்களை ஓடஓட விரட்டும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

மீண்டும் ஒருமுறை முதல்வராக, கட்சித் தலைமை பொறுப்புக்கு வர வேண்டிய எண்ணம் எனக்கில்லை. தொண்டர்களாகிய உங்களில் ஒருவரை முதலமைச்சராக கட்சியின் தலைமை பீடத்தில் உட்கார வைக்கும் கடமை எங்களுக்கு உள்ளது. நம்பிக்கையுடன் இருங்கள். தொண்டராக மட்டும் இருந்து இந்த இயக்கத்தை காப்பாற்றுகிறேன் - என்றார். (ஐ)

# முதல்வர் குடும்பத்தின் செயல்களால் மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர்!

## இந்திய மத்திய அமைச்சர்

ஈரோடு, ஏப். 26

தி. மு. க. அரசின் மக்கள் விரோத செயல்பாடுகள், முதல்வர் ஸ்டாலின் குடும்பத்தினரின் அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றால், தமிழக மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர் என மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

ஈரோட்டில் பா. ஜ. க. கட்சியினரை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தி. மு. க. அரசின் மக்கள் விரோத செயல்பாடுகள், முதல்வர் ஸ்டாலின் குடும்பத்தினரின் அதிகார துஷ்பிரயோகம் போன்ற செயல்களால், பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். அவர்கள், பிரதமர் மோடி தலைமையில் மாற்றத்தை விரும்புகின்றனர். மத்திய அரசு தமிழகத்துக்கு பல்வேறு திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் அனைத்து மத்திய அரசின் திட்டங்களையும், தங்களது திட்டங்களாக தமிழக அரசு கூறி வருகிறது. எனவே, பா. ஜ. க. தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் மக்களை அணுகி மத்திய அரசின் திட்டங்கள் குறித்து தெரிவித்து வருகிறோம்.

தமிழகத்தின் மீதும், தமிழக மக்கள் மீதும் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு அதிக அக்கறை எடுத்துக் கொள்கிறது. ஆனால், தி. மு. க. அரசும், அதன் அமைச்சர்களும், மத்திய அரசுக்கு எதிராகவும், பா. ஜ. கவுக்கு எதிராகவும் பொய்யான பிரசாரத்தை செய்து வருகின்றனர்.

தி. மு. க. அரசு குறித்தும், அவர்களது கொள்கை குறித்தும் தமிழகமக்கள் தற்போது புரிந்து கொண்டுவிட்டனர். விரைவில் இதற்கு முடிவு கட்டி, மக்கள் பா. ஜ. கவுக்கு ஆதரவு அளிக்கவுள்ளனர் - என்றார். (ஐ)

# மக்கள் நலனை மனதில் வைத்து அரசு முடிவுகளை எடுக்க வேண்டும்!

சென்னை, ஏப். 26

தமிழக அரசு மக்கள் நலனை மனதில் வைத்து கொள்கை முடிவுகளை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தி உள்ளார்.

அவர் தனது ருவிற்றர் பக்கத்தில், “தொழிலாளர் 12 மணி நேர வேலை என்ற மசோதா அறிவித்து பின்னர் நிறுத்தி வைப்பு, திருமண மண்டபங்களில் மதுபானம் வழங்கும் உரிமத்தை அறிவித்து பின்னர் ரத்து, பள்ளிக் கல்வி துறையில் ஆரம்ப வகுப்பு இரத்து என்ற அறிவிப்பு வெளியிட்டு மீண்டும் அதனை கொண்டு வந்தது என எதிலும் நிலையான முடிவு எதுவும் எடுக்கமுடியாத இந்த அரசின் நிதானமற்ற கொள்கைகளால் மக்கள் அவதிக்குள்ளவாது மிகுந்த வேதனைக்குரியது. கடுமையாக கண்டிக்கத்தக்கது.

இந்த நிர்வாக திறனற்ற அரசு, இனிவரும் காலங்களிலாவது, கோர்ப்ரேட் நலனை மட்டுமே மனதில் கொள்வதை விடுத்து, மக்கள் நலனை மனதில் நிறுத்தி அவர்களின் வாழ்வியலுக்கு உகந்த கொள்கை முடிவுகளை எடுக்க வேண்டுமென மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன்.” - என்றுள்ளது. (ஐ)

# விடைத்தாள் மதிப்பீடு தாமதம் மாணவர் எதிர்காலமே பாதிப்பு

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 26

**உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் தாமதம் அடைவதால் மாணவர்களின் எதிர்காலமே பாதிக்கப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினிகுமாரி விஜேரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.**

கல்வியமைச்சரிடம் விடைத்தாள்களை மதிப்பீட்டின் தாமதம் தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

பரீட்சைகள் திணைக்களம், கல்வித் திணைக்களம் என்பது வேறுவேறான இரண்டு திணைக்களங்கள் எனவும் பரீட்சைகள் திணைக்களத்தில் ஆளணி இல்லாத காரணத்தினால் அரசாங்கம் கல்வித் திணைக்களத்தில் உள்ளவர்களைக் கட்டணம் செலுத்தி பணிக்கு அமர்த்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே இதனை ஜனாதிபதி புரிந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பரீட்சைத் திணைகளில் விடைத்தாள்களை வைப்பதற்கு இடப்பற்றாக்குறை காணப்படுவதாகவும், முதலில் தாள்களை வைப்பதற்கு இடமொன்றைத் தேடிக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

11ஆம் ஆண்டு மாணவர்கள் அமருவதற்கு வகுப்பறைகள் இல்லாத நிலை இன்று காணப்படுவதாகவும் இவ்வாறான நிலைகள் முன்னெப்போதும் இலங்கையில் இடம்பெற்றதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தி ஆவணப்படம் இன்று திரையிடல்

யாழ்ப்பாணம், ஏப். 26

தவில் மேதை யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தி பவுண்டேசனால் தயாரிக்கப்பட்டு, பிரபல ஆவணப்பட இயக்குநர் அம்சன் குமாரினால் இயக்கப்பட்ட, இந்திய அரசின் தேசிய விருதினைப் பெற்ற "லய ஞான குபேர பூபதி - யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தி" என்னும் முழு நீள ஆவணப்படமானது, இன்று பிற்பகல் 03 மணிக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, கைலாசபதி கலையரங்கில் திரையிடப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, திரைப்படச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்நிகழ்வில், திரையிடலைத் தொடர்ந்து, அம்சன் குமாருடனான கலந்துரையாடலும் இடம்பெறும்.

தவில் இசை உலகின் மாபெரும் கலைஞரான இணுவில் தெட்சணாமூர்த்தியைப் பற்றிய இந்த முழு நீள ஆவணப்படமானது, இசைக்கலைஞர்கள், அறிஞர்கள், ரசிகர்கள் மற்றும் அவரது குடும்பத்தினரின் நேரடித் தகவல்களின் வாயிலாக அவரது வாழ்வினையும் மேதமையையும் சித்திரிக்கின்றது. இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் இந்த ஆவணப்படமானது படமாக்கப்பட்டுள்ளது.

இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ள இத்திரையிடலிலும் கலந்துரையாடலிலும் பங்குபற்றி, யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தியின் நினைவுகளை மீட்கும் ஒரு மாலைப்பொழுதிற்கு இசை ஆர்வலர்களையும், ஆவணப்பட ஆர்வலர்களையும் விழாக்குழுவினர் அழைக்கின்றனர். (அ)

# சிறீ லங்கன் எயார்லைன்ஸில் பெரும் ஆளணிப் பற்றாக்குறை

கொழும்பு, ஏப். 26

சிறிலங்கன் எயார்லைன்ஸின் பொறியியல் பிரிவில் 25 வல்லுநர்கள் பற்றாக்குறையாக உள்ளதாகவும், ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தொழில் வல்லுநர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக நாட்டை விட்டு வெளியேறி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

சிறிலங்கன் விமானங்களில் அண்மையில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகள் தொடர்பில் துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

சிறிலங்கன் விமான சேவையின் உயர்மட்ட முகாமைத்துவம், பொறியியல் திணைக்களம், சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை, விமான நிலையம் மற்றும் விமான சேவைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழு இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டது.

விமான நிறுவனத்துக்கு ஒரு விமானம் கூடச் சொந்தமாக இல்லை என்பதும், இயக்கப்படும் அனைத்து விமானங்களும் பல்வேறு நாடுகளில் இருந்து குத்தகை முறையின் கீழ் பெறப்பட்டவை என்பதும் தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து, பொறியியல் துறைக்கு நிபுணர்களை ஆட்சேர்ப்பு செய்து விமானங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார். (அ)

# இலங்கையில் 14 வருடங்களின் பின் பதிவாகியுள்ள மலேரியா மரணம்!

கொழும்பு, ஏப். 26

பேருவளை - சீனக்கோட்டை பகுதியில் 14 வருடங்களின் பின்னர் நாட்டில் மலேரியா நோயாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பேருவளை - சீனக்கோட்டை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இரத்தின வியாபாரியான இவர், தான்சானியா சென்று, ஏப்ரல் 10ஆம் திகதி நாடு திரும்பியுள்ளார். கடந்த 14ஆம் திகதி காய்ச்சல் தீவிரமடைந்ததால் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மறுநாள் 15 ஆம் திகதி வர்த்தகர் உயிரிழந்துள்ளார். இங்கு நடத்தப்பட்ட சோதனையில் இவருக்கு மலேரியா பாதிப்பு இருப்பது தெரியவந்துள்ளது.

குறித்த நபர் சுமார் இரண்டு வாரங்களாக வீட்டில் தங்கியிருந்ததால், குடியிருப்பாளர்கள் மற்றும் இப்பிரதேசவாசிகளிடமும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக களுத்துறை தேசிய சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர் தாமர களுபோவில தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் மலேரியா மரணம் எதுவும் பதிவாகாத நிலையில், மேலும் 2016 ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனம் இலங்கையை மலேரியா இல்லாத நாடாக அறிவித்துள்ளது.

இருப்பினும், வெளிநாட்டிலிருந்து வருபவர்களிடையே சில சந்தர்ப்பங்களில் மலேரியா பதிவாகியிருந்தாலும், 14 ஆண்டுகளுக்குப் பிறகு மலேரியா இறப்பு பதிவாகியுள்ளது. (அ)

# ரணிலுக்கு நிகர் அவர்தான்!

### அமைச்சர் அலி சப்ரி புகழாரம்

கொழும்பு, ஏப். 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிகர் அவர்தான். நாம் இப்போது அவருடன் இணைந்து செயலாற்றும் போது அது புரிகின்றது" - என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்- இப்போதிருக்கின்ற தலைவர்களுள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகச் சிறந்த தலைவர். அவரது வேலைத்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்குச் சில காலம் வழங்கப்பட வேண்டும்.

நான் இருக்கின்ற முகாமை விட்டுப் போகின்றவன் அல்ல. எமது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியே ரணிலை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தது.

நான் இதற்கு முன் அவருக்கு எதிராகவே வேலை செய்தேன். இப்போதுதான் அவருடன் இணைந்து செயலாற்றும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அவர் பற்றி நாம் தவறாகப் புரிந்து வைத்திருந்தோம் என்பது அவருடன் இப்போது இணைந்து செயலாற்றும் போது புரிகின்றது.

பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு, வெளிவிவகார கொள்கை போன்றவற்றில் ஜனாதிபதி ரணிலுக்கு விரிவான அறிவு உண்டு- என்றார். (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையிடம்

கொழும்பு, ஏப். 26

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கை கத்தோலிக்க ஆயர் பேரவையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஒப்புதலுடன் அமைச்சர் டிரான் அலஸ் அறிக்கையின் பிரதியொன்றை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் அருட்தந்தை ஹெரோல்ட் அந்தோனி பெரேராவிடம் கையளித்துள்ளார். (அ)

# தினேஷ் ஷாப்டர் பயணித்த காருக்குள் 2 வெளிநாட்டவரின் உயிரியல் மாதிரி!

### பிரையன் தோமஸிடம் பரிசோதனைக்கு அனுமதி

கொழும்பு, ஏப். 26

ஜனசக்திப் பணிப்பாளர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பிலான மரபணு அறிக்கையின்படி மேலும் இரண்டு வெளிநாட்டு உயிரியல் மாதிரிகள் இருப்பதாக நீதிமன்றில் வெளிப்படுத்தப்பட்ட நிலையில், ஷாப்டரின் வர்த்தக நண்பரான கிரிக்கெட் வர்ணனையாளர் பிரையன் தோமஸின் மரபணு அறிக்கையையும் பெற்றுக் கொள்ளுமாறு கொழும்பு மேலதிக நீதவான் ராஜிந்திர ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

ஷாப்டரின் மரணம் கொலையா அல்லது தற்கொலையா என்பதை தீர்மானிக்க நியமிக்கப்பட்ட ஐந்து பேர் கொண்ட மருத்துவக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கொழும்பு மேலதிக நீதவான் இந்த உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நீதிமன்றத்தில் ஆஜரான குழுவைச் சேர்ந்த இரண்டு மருத்துவ நிபுணர்கள், ஷாப்டரின் கையடக்கத் தொலைபேசி பதிவுகள் மற்றும் வாட்ஸ் அப் செய்திகள் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் உரிய உத்தரவை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

ஷாப்டர் பயன்படுத்திய தண்ணீர் போத்தல், கேபிள் வயர், கைகளில் கட்டியிருந்த கம்பி ஆகியவற்றில் இரண்டு வெளிநாட்டு உயிரியல் மாதிரிகள் இருந்ததாக அரசாங்கப் பகுப்பாய்வாளர் நீதிமன்றத்தில் அறிக்கை செய்திருந்தார். (அ)

# பூங்காவிலுள்ள மிருகங்களை இறைச்சியாக்கி விற்பனை!

கொழும்பு, ஏப். 26

அம்பாந்தோட்டை ரிதியகம சபாரி பூங்காவில் மிருகங்களை கொன்று இறைச்சியாக்கி விற்பனை செய்வது தொடர்பில் அரசாங்கம் முறையான விசாரணைகளை முன்னெடுக்குமா என ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண நேற்று சபையில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, இது எனக்கு சம்பந்தமான விடயம் அல்ல, வனவிலங்கு அமைச்சருக்குச் சொந்தமான விடயம்.

எனக்குத் தெரிந்த வரையில் இது தொடர்பாக மேலதிக செயலாளர் தலைமையில் குழுவொன்றை நியமித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றையும் அவர் தாக்கல் செய்துள்ளார்.

எதிர்காலத்தில் இந்த சம்பவம் தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளேன் - என்றார். (அ)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மாணவர் சமூகத்துக்கு ஆபத்தானது

**யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டு**

யாழ்ப்பாணம், ஏப். 26

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், மாணவர் சமூகத்துக்கும் பாரதூரமானது என்பதுடன், அதனைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த ஆட்சியாளர்கள் முன்வந்தால், வடக்கு-கிழக்கு தழுவிய ரீதியில் மாணவர்களினால் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் தெரிவித்தார்.**




யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூட்டத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - 44 வருடமாக எங்கள் மக்களை அடக்கி ஒடுக்கிக்கொண்டிருந்த பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு மாறாக இப்பொழுது ஒரு சட்டமூலம் வந்திருக்கின்றது .

அந்த சட்டம் மூலம் எங்களை அடக்குவதற்கான சட்டமூலமே. அதாவது ஒரு மனிதன் சுதந்திரமாக ஜனநாயக ரீதியாக தன்னுடைய கருத்தை தெரிவிப்பதற்கு எதிராக கடுமையாக இயற்றப்பட்ட சட்டமூலமாகவே இந்த சட்ட மூலம் காணப்படுகிறது.

மாணவர் சமூகத்தை பாரியளவில் இச் சட்டமூலம் பாதித்திருக்கின்றது. எங்களுடைய மக்களின் குரல் இந்த பயங்கரவாத தடைச் சட்டம் மூலம் நசுக்கப்படுகின்து.

மேலும் ஜனநாயக ரீதியாக போராடுகின்ற மாணவர்கள் கைது செய்யப்பட்டு இதன் மூலம் அச்சுறுத்தப்படுகின்றார்கள். அந்த வகையிலே இந்த புதிதாக உருமாறி வரவிருக்கின்ற சட்டமூலத்தை சர்வதேசம் தலையிட்டு நிறுத்தவேண்டும்.

இதனை யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முற்றாக எதிர்க்கின்றது-என்றார். (அ)

# கொழும்பில் பலப்படுத்தப்படும் சுற்றுலா விடுதிகளின் பாதுகாப்பு!

கொழும்பு, ஏப். 26

கொழும்பு சுற்றுலா விடுதிகள் மற்றும் அவற்றுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க விடுதிகளின் பாதுகாப்புப் பிரதானிகளுக்கு அறிவித்துள்ளார்.

அத்துடன், எதிர்காலத்தில் சுற்றுலா விடுதிகளில் ஏற்படக்கூடிய பிரச்னைகளுக்கு தீர்வுகளை மேற்கொள்ளுமாறும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு சுற்றுலா விடுதிகளின் பாதுகாப்பு பிரதானிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் இதனைத் தெரிவித்தார் என குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், தற்போது சுற்றுலா விடுதிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் எதிர்நோக்கும் பாதுகாப்புச் சிக்கல்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

# உயிரை மாய்த்துக்கொள்வோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம்!

கொழும்பு, ஏப். 26

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு நாட்டில் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருக்கலாம் என மனநல மருத்துவம் மற்றும் மூத்த விரிவுரையாளர் சத்துரி சுரவீர தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் சுமார் 100,000 பேரில் 17 பேர் உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக குறிப்பிட்டார்.

துரதிஷ்டவசமாக, 2022ஆம் ஆண்டுகளுக்கான தரவு எதுவும் இதுவரை பெறப்படவில்லை.

எனினும், கடந்த நான்கு மாதங்களில் இந்த எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் ஆண்டுதோறும் 3,000 பேர் உயிரை மாய்த்துக்கொள்ளும் சம்பவங்கள் பதிவாகின்றன, கிட்டத்தட்ட எட்டு அல்லது ஒன்பது சம்பவங்கள் தினசரி பதிவாகியுள்ளன.

உயிரை மாய்த்துக்கொள்ளும் சம்பவங்கள், தற்போதைய பொருளாதார நெருக்கடியுடன் இப்போது சிறிது அதிகரித்துள்ளன.

எனவே, குறித்த செய்திகளை வெளியிடும்போது ஊடகங்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென சத்துரி சுரவீர கோரிக்கை விடுத்தார். (அ)

# மருத்துவருக்குக் கொலை அச்சுறுத்தல்! மருத்துவ பிரிவின் சேவைகள் நிறுத்தம்!!

யாழ்ப்பாணம், ஏப். 26

மருத்துவருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை அடுத்து புத்தூர் ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவின் மருத்துவ சேவைகளை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குழு ஒன்றினால் மருத்துவருக்கு உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதுடன் அவரது அலுவலகத்துக்கும் சேதம் விளைவித்தமை தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறியதை அடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த கடைசி பங்குனித் திங்கள் தினமான ஏப்ரல் 10ஆம் திகதி புத்தூர் சந்தியில் அமைக்கப்பட்டதாக சாந்தி நிலையத்தில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டு பெரிய சத்தமாக பாடல்கள் இசைக்கப்பட்டுள்ளன.

அதனால் தமது சேவைகளுக்கு இடையூறு ஏற்படுவதாக மருத்துவ குறித்த தாக சாந்தி நிலைய ஏற்பாட்டாளர்களுக்கு தெரிவித்துள்ளார்.

மருத்துவரின் கருத்தை பொருட்படுத்தாத அவர்கள் தொடர்ச்சியாக பெரிய சத்தமாக பாடல்களை இசைக்கவிட்டுள்ளனர்.

இதன்பின்னர் குழு ஒன்று மருத்துவரை உயிருக்கு அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டதுடன், அவரது அலுவலகத்துக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே புத்தூர் ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவின் மருத்துவ சேவைகளை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தவேண்டும், அங்கு பணியாற்றும் ஊழியர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும், அதன் பின்னரே புத்தூர் ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவின் மருத்துவ சேவைகளை மீள ஆரம்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாண நிர்வாகம் பொலிஸ் உயர்மட்டத்துக்கு அறிவித்துள்ளது. (அ-03)

# முட்டை இறக்குமதி குறித்து தீர்மானிக்க பிரதமரின் செயலர் தலைமையில் குழு!

கொழும்பு, ஏப். 26

முட்டை இறக்குமதி செய்வது தொடர்பிலான தீர்மானங்களை எடுப்பதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவில் விவசாய அமைச்சின் செயலாளர், வர்த்தக அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சரவை செயலாளர் ஆகியோர் அடங்குவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து இதுவரை 05 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட மேலும் 02 மில்லியன் முட்டைகள் கொழும்பு துறைமுகத்தில் உள்ளதாக அமைச்சர் கூறினார்.

அவற்றை விடுவிப்பதற்கு தேவையான அறிக்கை நேற்று முன் தினம் வரை கிடைக்கவில்லை என வர்த்தக அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, ஏப். 26

சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமானவகையில் 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகச் சட்டத்தைத் திருத்தவேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய சட்ட விரோதமாக வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தொழிலுக்குப் பிரவேசித்துள்ள தரப்பினர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, உப முகவர்கள் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காக இணைத்துக் கொள்கின்ற செயன்முறையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறையில் புலம்பெயர் தொழிலாளர்களை ஆபத்துக்குள்ளாக்குகின்ற பாரியளவிலான மோசடிகள் மற்றும் ஊழல்களைக் குறைப்பதற்கு இயலுமை கிட்டும் வகையில் புதிய சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கும், அதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# இலங்கையின் யானைகள் வழங்கும் முடிவுக்கு பாகிஸ்தானில் எதிர்ப்பு!

கொழும்பு, ஏப். 26

பாகிஸ்தானுக்கு இரண்டு பெண் யானைகளை இலங்கை அன்பளிப்பாக வழங்குவது தொடர்பில் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கராச்சி மிருகக்காட்சிசாலையில் உயிரிழந்த ஆப்பிரிக்க யானையான நூர் ஜெஹானுக்குப் பதிலாக, பாகிஸ்தானுக்கு இலங்கை இரண்டு பெண் யானைகளை பரிசாக வழங்குவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

முன்னதாக இந்த யானைகளில் ஒன்று, கராச்சிக்கு கொண்டு செல்லப்படும், மற்றொன்று லாகூர் அனுப்பப்படும் என்று இலங்கையின் தூதரக அதிகாரி யாசின் ஜோயா தெரிவித்திருந்தார்.

எனினும் இந்த அறிவிப்புக்கு பாகிஸ்தானில் உள்ள விலங்கு பிரியர்களிடையே வரவேற்பு கிடைக்கவில்லை.

இலங்கையின் இந்த முடிவு குறித்து அனௌஷி அஷ்ரப் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

தொலைக்காட்சி தொகுப்பாளரும் சமூக ஆர்வலருமான அனௌஷி அஷ்ரப், தனது சமூக ஊடக இடுகைகளில், 'கடத்தல்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

யானைகளை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு நகர்த்துவது கொடூரமானது, ஏனெனில் அவற்றுக்கு சிறை வாழ்க்கை வேண்டியதில்லை என்று அஷ்ரப் கூறியுள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தானில் உள்ள விலங்கியல் பூங்காவின் நிலைமைகள் குறித்தும் அவர் கவலை தெரிவித்துள்ளார்

இலங்கையின் யானைகள் அனுப்பப்படுமானால், அவை தங்களுக்குத் தேவையான பராமரிப்பைப் பெறாது, சிறிய குடியிருப்புகளில் வாழ வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று கூறியுள்ளார். (அ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 350 மில்லியன் டொலர்கள் கடனுதவி!

## பொருளாதார நிலைபேற்று வேலைத்திட்டத்துக்கு

கொழும்பு, ஏப். 26

**பொருளாதார நிலைபேற்று வேலைத்திட்டத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட விசேட கடன் வசதியைப் பெற்றுக் கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நீடிக்கப்பட்ட நிதிவசதிகளுக்கு இணையாக இலங்கையின் நிலைபேற்றுத்தன்மை மற்றும் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்திவங்கியால் 350 மில்லியன் டொலர்கள் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட விசேட கடன்வசதி மற்றும் 1.5 மில்லியன் டொலர்கள் தொழிநுட்ப உதவித் தொகையை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த கடன் தொகையை பெற்றுக் கொள்வதற்காக தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# வருடத்தின் முதலாம் காலாண்டில் 316 பில்லியன் ரூபா வரி சேகரிப்பு!

கொழும்பு, ஏப். 26

2023ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், 316 பில்லியன் ரூபாய் வரி சேகரிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நாட்டில் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 316 பில்லியன் ரூபாய் வருமான வரி வசூலிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் முதல் காலாண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 146 மில்லியன் ரூபாவை வசூலித்திருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சூடானில் சிக்கியுள்ள இலங்கையர்கள் அடுத்த சில நாள்களில் மீட்கப்படுவர்!

கொழும்பு, ஏப். 26

சூடானில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களைஅடுத்த சில நாட்களில் பாதுகாப்பாக வெளியேற்ற முடியும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் தளத்தில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அந்த பதிவில், சூடானில் உள்ள இலங்கையர்களின் நிலமையை நாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். அவர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவது குறித்து கவனம் செலுத்துகின்றோம்.

சூடானில் இடம்பெறும் வன்முறைகள் குறித்து நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம்.

மோதல்களை முடிவிற்கு கொண்டுவருமாறு மோதலில் ஈடுபட்டுள்ளவர்களை கேட்டுக் கொள்கின்றோம்.

சமாதான பேச்சுவார்த்தைகளிற்கு முன்னுரிமை வழங்குவதே சாத்தியமான நிரந்தரமான தீர்வு.

சூடான் மக்களிற்கு அமைதி, சமாதானம், ஸ்திரத்தன்மை, முன்னேற்றம் போன்றவை கிட்ட வேண்டும்-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# சட்டத்தரணி வீட்டு நாய்க்கு விசம் வைத்து கொன்றார் என பெண் சட்டத்தரணி கைது!

கொழும்பு, ஏப். 26

உயர்நீதிமன்றின் முன்னாள் நீதியரசர் ஒருவரின் புதல்வரான சட்டத்தரணியின் வீட்டில் வளர்க்கப்பட்ட நாய்க்கு, விசம் வைத்து கொன்றார் என்ற சந்தேகத்தின் பேரில் உயர் நீதிமன்றின் பெண் சட்டத்தரணியொருவர் நேற்று கைது செய்யப்பட்டார் என கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சட்டத்தரணி மத்தேகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் கூறினர்.

கடந்த 12 ஆம் திகதி கிரிவத்துடுவ, தலகலவத்த பிரதேசத்தில் உள்ள மனுதாரரான சட்டத்தரணியின் வீட்டைச் சுற்றி பல இடங்களில் சந்தேகத்திற்கிடமான வகையில் சிறிய அளவிலான சில பொதிகள் கிடந்துள்ளன.

அதனைப் பார்த்த பணிப்பெண் சட்டத்தரணிக்கு அறிவித்து, தேடிப்பார்த்தபோது திடீரென வீட்டில் இருந்து நாய் ஓடிவந்து தரையில் மயங்கி விழுந் துள்ளது.

இதனையடுத்து. கால்நடை மருத்துவரை வீட்டுக்கு வரவழைத்து நாயை பரிசோதித்த போது, குறித்த நாய் ஒருவகை விசத்தை உட்கொண்டதால் இறந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வீட்டில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமெராவில் கடந்த 12 ஆம் திகதி பதிவான காட்சிகளை ஆய்வு செய்தபோது, வீட்டின் முன்புறம் உள்ள பிரதான வாயில் அருகே சிவப்பு நிற காரில் வந்திறங்கிய ஒருவர் தோட்டத்துக்குள் சில பொருட்களை வீசுவது தெரிய வந்தது.

இதனடிப்படையில், கஹதுடு பொலிஸ்நிலையத்துக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் சிசிரிவி சாட்சியங்களைக் கொண்டு விசாரணைகளை முன்னெடுத்ததில் குறித்த கார் உயர்நீதிமன்றத்தில் கடமையாற்றும் பெண் சட்டத்தரணி ஒருவருக்குச் சொந்தமானது என தகவல் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி, சந்தேகநபரான சட்டத்தரணியை நேற்று பொலிஸ்நிலையத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அதன்பிரகாரம் வருகை தந்த அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்த பொலிஸார் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

இதேவேளை, ஐந்து வருடங்களுக்கு முன்னர் முறைப்பாட்டாளரான சட்டத்தரணியைக் கொல்லும் நோக்கில் நான்கு பேர் அவரது வீட்டுக்கு வந்து வன்முறையில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

மனுதாரரான சட்டத்தரணி மறைந்த பிரபல உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் மகன் எனத் தெரியவந்துள்ளது. (அ)

# உயர்தர பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய ஆசிரியர்கள் தயார்

## இலங்கை ஆசிரியர் சங்கம்

கொழும்பு, ஏப். 26

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு இதுவரை 12,000 ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை எந்த நேரத்திலும் மதிப்பீடு செய்வதற்கு ஆசிரியர்கள் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டு பணிக்காக வழங்கப்படும் உதவித் தொகை போதாது எனக் கூறி ஆசிரியர்கள் பணியிலிருந்து விலகியிருந்தனர் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், ஆசிரியர்கள் கோரிய உதவித்தொகையை வழங்கக்கல்வி அமைச்சு சம்மதம் தெரிவித்ததையடுத்து, மீண்டும் விடைத்தாள் மதிப்பீட்டிற்குச் செல்ல ஆசிரியர்கள் விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வவுனியா கட்டையர்குளத்தில் சட்டவிரோதமாக காடு அழிப்பு!

வவுனியா, ஏப். 26

வவுனியா, கட்டையர்குளம் பகுதியில் 12 ஏக்கர் காடு சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ளபோதும் இது தொடர்பில் பொலிஸாரும், வன இலாகாவும் நடவடிக்கை எடுக்கவில்லை என அப்பகுதி கிராம மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா, ஈச்சங்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள கட்டையர்குளம் பகுதியில் வன இலாகாவுக்கு சொந்தமான காட்டுப்பகுதி 12 ஏக்கர் கடந்த சில நாட்களாக அழிக்கப்பட்டு வருகின்றது.

இது குறித்து அரச அதிகாரிகள் பலருக்கும் கடந்த சில நாட்களுக்கு முன்னரே மக்கள் முறையிட்டும் குறித்த காடழிப்பு தடுத்து நிறுத்தப்படவில்லை என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த பகுதியில் காடழிப்பு மற்றும் அதனுடன் இணைந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோது அங்கு சென்ற கிராம மக்கள் அதனை தடுத்து நிறுத்தியுள்ளதுடன், இது தொடர்பில் ஈச்சங்குளம் பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்திருந்தனர்.

இருப்பினும் பொலிஸார் தமது முறைப்பாட்டை பதிவு செய்யவில்லை என கிராம மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த பகுதியானது வரைபடத்தில் காட்டுப் பகுதியாக காணப்படுகின்றபோதும் எவருடைய அனுமதியும் பெறப்படாது. சில அதிகாரிகள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி காடழிப்பில் ஈடுபடுகின்றார்களா அல்லது காடழிப்புக்கு துணை போகின்றார்களா என கிராம மக்கள் கேள்வி எழுப்பியுள்ளதுடன், இது தொடர்பில் அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் கவனம் செலுத்தவேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளர், வவுனியா மாவட்ட செயலாளர், வனஇலாகா ஆகியோருக்கும் கிராம மக்களால் எழுத்து மூலம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து கருத்துக் கூற அநுரகுமாரவுக்கு அருகதை கிடையாது!

## சாடுகின்றார் நிமல் லான்சா



கொழும்பு, ஏப். 26

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக கருத்து தெரிவிப்ப தற்கு, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க மற்றும் விஜித ஹேரத் ஆகியோருக்கு எந்த அருகதையும் கிடையாதென பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத்தாரிகளின் தந்தையான இப்ராஹிம், மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த ஒருவர் என்றும் நிமல் லான்சா சுட்டிக் காட்டினார்.


தாக்குதல் நடைபெற்று 4 வருடங்கள் கடந்த பின்னர் நீர்கொழும்பை முற்றுகையிடப்போவதாக, மக்கள் விடு தலை முன்னணியின் தலைவர் தெரிவித்திருந்தாகவும், ஆனால் நீர்கொழும்பை முற்றுகையிடுவ தற்கு பதிலாக இப்ராஹிமின் வீட்டையே அவர்கள் முற்றுகையிடவேண்டும் என்றும் நிமல் லான்சா குறிப்பிட்டார்.

இப்ராஹிமின் இரண்டு மகன்களும் மருமகளும் தான் தற் கொலை குண்டுதாரி கள். எனவே நீர்கொ ழும்பை எதற்காக முற்றுகையிட வேண் டும் என்றும் நிமல் லான்சா கேள்வி எழுப்பினார்.

அனுரகுமார நீலிக் கண்ணீர் வடிக் காமல் இப்ராஹிமின் வீட்டை முற்றுகையிட்டிருக்க வேண்டும். அதை விடுத்து தற்போது வெட்க நரம்புகள் இல்லாமல் நகைச்சு வையாக அறிக்கை விடுவதாக நிமல் லான்சா குறிப்பிட்டார். (அ)

# சூடானில் சிக்கித் தவிக்கும் தமிழர்கள் ரொட்டி, கழிவறை நீர் மூலம் உயிர் வாழும் அவலம்!





சூடானில் ராணுவம் மற்றும் துணை ராணுவப் படையினருக்கு இடையே தொடர்ந்து குண்டு மழை மற்றும் துப்பாக் கிச் சூடு நடந்து வரும் நிலையில், அங்கு 100க்கும் மேற்பட்ட இந்தியர்கள் சிக்கியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர் களில் பெரும்பாலோர் ஹோட்டல் அறை கள் அல்லது வீடுகளில் உணவுப்பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளனர்.

சூடானில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாடு, கர்நாடகாவை சேர்ந்தவர்கள் சிலரிடம் பேசியபோது, கடுமையான துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டது.

சூடானின் தலைநகரான கார்டூமில் மட்டுமல்லாமல் அங்கிருந்து வெகு தொலைவில் உள்ள அல்-பஷிரிலும் இந்த துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டது.

**உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு**

“போர் நிறுத்தம் என்று சர்வதேச ஊடகங்களில் செய்தி வெளியானது. இதை நம்பி சொந்த ஊருக்கு செல்ல வீடுகளில் இருந்து பலர் கிளம்பிச் சென்றனர். ஆனால் போர் நிறுத்தத்தை இருதரப்பும் பின்பற்றவில்லை. அதனால் வெளியே சென்றவர்கள் நிலை என்ன ஆனது என தெரியவில்லை,” என்று தெரிவித்தார் சூடானில் வசிக்கும் தமிழரான ராவுத்தர்.

கடைகள் இல்லாததால், உணவு பொருட்கள் வாங்க முடியாமல் சிரமப்படுகிறோம். பகல் முழுவதும் துப்பாக்கிச் சுடும் சத்தம் கேட்கிறது. அதனால் பொருட்கள் வாங்க வெளியே செல்லாமல் குடும்பத்துடன் வீடுகளில் முடங்கி இருப்பதாக தலைநகர் கார்டூமுக்கு அருகேயுள்ள உம்துர்மான் என்ற நகரில் சிக்கி இருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ராவுத்தர் தெரிவித்தார்.

கார்டூமில் இருக்கும் மற்றொரு தமிழரான ராஜ் மற்றும் அவரது நண்பர்களும் தலைநகரை விட்டு வெளியேற முடியாமல் தவித்து வருவதாக கூறினர்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் உள்ளூர் மக்களை கார்டூமை விட்டு வெளியேற ராணுவம் அனுமதிக்கிறது. ஆனால் இந்தியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. இங்கிருந்து எங்களை வெளியே செல்ல இருதரப்பும் அனுமதிக்கவில்லை என்றார் அவர்.

“தமிழர்கள் உட்பட சூடானில் இருக்கும் இந்தியர்கள் ஒரு வாட்சாப் குழுவில் இருக்கிறோம். இந்த குழுவின் மூலமாக மீட்பு நடவடிக்கைகள் குறித்து சூடானில் உள்ள இந்திய தூதரகம் தகவல்களை எங்களிடம் தெரிவிக்கிறது. ஆனால் இப்போது வரை மீட்பு நடவடிக்கை எப்போது தொடங்கும் எனத் தெரியவில்லை,” என்றார் ராஜ்.

தலைநகரில் ஒரு வாரத்திற்கு மேலாக நடைபெற்ற போரினால் சாலைகளில் பிணங்கள் குவித்து வைக்கப்பட்டு இருக்கின்றனர். இதனால் தொற்று நோய் ஏற்படும் அபாயம் இருப்பதாக ராஜ் கூறினார்.

“எனக்கு தெரிந்த இந்தியர்கள் சிலர் போன வாரம் வேலைக்காக சென்றனர். ஆனால் வேலை முடிந்து அவர்களின் பலர் இன்னும் திரும்பவில்லை. ஒரு வாரத்திற்கும் மேலாகி விட்டது, அவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை. மின்சாரம் இல்லாததால் போன் சார்ஜ் செய்ய முடியாமல் மாட்டி இருக்கிறார்களா என்பதும் தெரியவில்லை,” என எம்முடன் பேசிய சதீஷ் குமார் கூறினார்.

குறைவான உணவை வைத்து குடும்பத்தை பராமரித்து வருவதாக ராவுத்தர் தெரிவித்தார்.

“வீட்டில் உள்ளவர்கள் இன்னும் பயத்துடன் இருக்கிறார்கள். மின்சாரம் இல்லாததால் மோட்டார் போட்டு தண்ணீர் எடுக்க முடியவில்லை. வெளியே சென்று உணவு பொருட்கள் வாங்கவும் முடியவில்லை. கார்டூமில் நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது,” என்று கூறினார் அவர்.

சூடானில் நூற்றுக்கணக்கான இந்தியர்கள் பல்வேறு தொழில் செய்து வருவதாகவும், சிலர் தனியார் நிறுவனங்களின் பணியாற்றுவதாகவும் ராஜ் தெரிவித்தார். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் 30 பேர் வரை இங்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

**கழிவறை குழாய் தண்ணீர்**

“கடந்த வாரம் மோதல் தொடங்கியதில் இருந்து ஒரு ஹோட்டலில் நாங்கள் தங்கியுள்ளோம். இங்கு ரொட்டியும், கழிவறையில் இருக்கும் குழாயில் இருந்து வரும் தண்ணீரைக்குடித்து உயிருடன் இருக்கிறோம். இப்போது இந்த ஒரு அறையில் நாங்கள் பத்து பேர் வசிக்கிறோம்,” என்று கர்நாடகாவைச் சேர்ந்த சஞ்சு, கூறினார்.

“இது மிகவும் பயங்கரமாக உள்ளது. திரைப்படங்களில் பார்க்கும் துப்பாக்கிச் சூடு, குண்டுவெடிப்புகளை விட ஆபத்தான சூழ்நிலையில் நாங்கள் சிக்கி இருக்கிறோம். நாங்கள் இங்கு 31 பேர் இருக்கிறோம். நேற்று அரை மணி நேரம் ஒரு கடை திறக்கப்பட்டது. அங்கிருந்து எங்களுக்கு கொஞ்சம் அரிசி மற்றும் தண்ணீர் கிடைத்தது,” என்று அல்-பஷீரில் சிக்கியுள்ள பிரபு கூறினார்.

“பின்னணியில் துப்பாக்கிச் சூடு சத்தத்தை நீங்கள் கேட்கலாம். மணிக்கணக்கில் இடைவிடாமல் இது நடந்து வருகிறது,” என்று சஞ்சு கூறினார். அப்பகுதியில் மின்சாரம் இல்லாதது குறித்தும் அவர் புகார் தெரிவித்தார்.

“பக்கத்தில் உள்ள ஐந்து மாடி ஹோட்டலில் 98 பேர் இருக்கிறார்கள். நமது தூதரக அதிகாரிகள் எங்களைத் தொடர்பு கொண்டு, வெளியே செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளனர். ஆனால் உணவு மற்றும் தண்ணீர் இல்லாமல் எவ்வளவு காலம் இருக்கமுடியும்,” என்று அவர் கேள்வி எழுப்பினார்.

சஞ்சுவும் அவரது மனைவியும் ஏப்ரல் 18 அன்று இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லவிருந்தனர், ஆனால் விமான நிலையம் அதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு மூடப்பட்டது.

“சில இடங்களில் சூடான் நாட்டு மக்கள் எங்களுக்கு உணவு வழங்கினர். இரண்டு நாட்களுக்கு முன்பு அங்குள்ள என் மகள், மருமகனிடம் பேசினேன். ஆனால் கடந்த சில நாட்களாக அவர்களுடன் பேச முடியவில்லை,” என்று கர்நாடகாவின் ஷிவமோகாவில் வசிக்கும் ஹக்கி-பிக்கி பழங்குடியினரின் முதல் பொறியாளர் குமுதா தெரிவித்தார்.



**இந்தியர்களின் நிலைமை என்ன?**

சூடானில் கணிசமான எண்ணிக்கையில் இந்தியர்கள் பணியாற்றி வருகிறார்கள். சூடானில் தலைநகர் கார்டூம் நகரில் இந்தியாவின் தூதரகம் அமைந்திருக்கிறது. இருதரப்பு மோதலின் போது ஆல்பர்ட் அகஸ்டின் என்ற இந்தியர் ஒருவர் கொல்லப்பட்டதாக இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

சூடானில் நடைபெறும் மோதல் முடிவுக்கு வர சில காலம் ஆகும் என்பதால், மீட்பு நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அதுவரை இந்தியர்கள் அனைவரும் பாதுகாப்பாக வீடுகளில் தங்கியிருக்க இந்திய தூதரகம் அறிவுறுத்தல் வழங்கியிருக்கிறது.

**சூடானில் என்ன நடக்கிறது?**

சூடானில் 2021-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஓர் ஆட்சிக்கவிழ்ப்பு நடந்தது. அப்போதிருந்து அந்நாட்டை ராணுவப் படைத்தலைவர்களைக் கொண்ட ஒரு குழு நிர்வகித்து வருகிறது.

இப்போது நிகழ்ந்துகொண்டிருக்கும் சிக்கலில் பிரதானமாக இரண்டு ராணுவத் தளபதிகள் உள்ளனர். ஜெனரல் ஃபத்தா அல்-புர்ஹான், சூடானின் படைத் தலைவர். இதனால் நடைமுறைப்படி இவர் நாட்டின் ஜனாதிபதி.

அவருக்கு அடுத்த நிலையில் இருப்பவர் ஜெனரல் ஹம்தான் தாகலோ. இவர் ஹெமெத்தி என்றும் அழைக்கப்படுகிறார். இவர் சூடானின் துணை ராணுவமான Rapid Support Forces இன் தலைவர்.

இருவருக்கும் இடையே நாடு செல்லும் திசை, ஜனநாயக அரசினை அமைப்பது போன்ற விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

இருவருக்குமிடையே முக்கியமான பிரச்சனைகள் துணை படையின் ஒரு லட்சம் வீரர்களை ராணுவத்தில் இணைப்பதும், அப்படி நடந்தால், படைகளுக்கு யார் தலைமை தாங்குவது ஆகியவை.

இதன் காரணமாக ஏற்பட்ட பிரச்னை கடந்த வாரம் மோதலாக வெடித்தது. இருதரப்புக்கும் இடையே நடக்கும் மோதலின் காரணமாக 200 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

**ராணுவ ஆட்சி ஏன்?**

2019ஆம் ஆண்டு, சூடானின் நீண்டநாள் அதிபராக இருந்த ஒமர் அல்-பஷீர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அப்போதிருந்து நிலவிவந்த இறுக்கத்தின் சமீபத்திய விளைவுதான் இந்த மோதல்.

பஷீர் அதிபராக இருந்தபோது, 30 ஆண்டுகளுக்குமேல் நீண்டு கொண்டிருந்த அவரது ஆட்சிக்கு முடிவுவேண்டி மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர். ராணுவம் அவருக்கு எதிராக ஒரு ஆட்சிக்கவிழ்ப்பை நிகழ்த்தியது. அதன்பின்னும், ஜனநாயக அரசுவேண்டி மக்கள் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

அதைத்தொடர்ந்து, மக்களும் ராணுவமும் இணைந்த ஒரு அரசு நிறுவப்பட்டது. ஆனால் இதுவும் 2021ஆம் அண்டு நிகழ்ந்த ஒரு ஆட்சிக்கவிழ்ப்பினால் வீழ்த்தப்பட்டது.

அப்போதிருந்து ஜெனரல் புர்ஹான் மற்றும் ஜெனரல் தாகலோ ஆகியோருக்கு இடையேயான போட்டி தீவிரமடைந்து வந்திருக்கிறது.

கடந்த டிசம்பர் மாதம், ஜனநாயக அரசினை நிறுவுவதறகான ஒரு ஒப்பந்தம் சம்மதமானது, ஆனால் இறுதிகட்டப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தன. (பிபிசி)

# பொருளாதார வீழ்ச்சிக்கான பொறுப்பை மக்கள் மீது சுமத்துதல்!



கலாநிதி ஜெகான் பெரேரா

ஆளும் கட்சி மெதுவாக ஆனால் உறுதியாக நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டு செயற்படத் தொடங்குகின்றது. ஆளும் கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நீக்கப்பட்டமை இதன் ஒரு அறிகுறியாகும். கடந்த வருடம் பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து வேறுபட்டதாக ஒரு மறுசீரமைப்பு பாத்திரத்தை வகிக்கத்தொடங்கிய அதன் சில உறுப்பினர்களில் அவரும் ஒருவர். பாராளுமன்றத்தில் ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பில் மறுசீரமைப்பு பிரிவின் உறுப்பினரான டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவாக செயற்பட்டு பேராசிரியர் அவருக்கு வாக்களித்தார்.

ஆனால், பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் வேறுவிதமாக சிந்தித்து எதிர்க்கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்தனர். தங்களின் போக்கை மாற்றிக்கொள்ளாத ஆளும் கட்சி உறுப்பினர்களின் வாக்குகளிலேயே விக்கிரமசிங்க தனது வெற்றிக்கு தங்கியிருந்தார். அழகப்பெரும வெற்றி பெற்றிருப்பாரேயானால், பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுத்த ஆட்சிமுறைமையில் மாற்றம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு ஆளும் கட்சிக்குள் இருக்கக்கூடிய மறுசீரமைப்புக்கு விருப்பமுடையவர்களில் பெரும்பாலானவர்களின் ஆதரவைப் பெற்றிருக்க முடியும்.

கடந்த வருட நடுப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவையும் அவரது அரசாங்கத்தையும் அதிகாரத்தில் இருந்து தூக்கியெறிந்த போராட்ட இயக்கத்தின் போர்க்குரல் ஒரு முறைமை மாற்றமேயாகும். இதுவே பதவியில் இருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் வீட்டுக்கு போகவேண்டும் என்று கோரிய சுலோகங்களில் பிரதிபலித்து நின்ற ஒரு அரசியல் மற்றும் தார்மீக நிலைப்பாடாகும். "முறைமை மாற்றம்" என்பதன் அர்த்தத்தை பலர் தெரிந்திருக்கா விட்டாலும் கூட "கோட்டா வீட்டுக்கு போ" என்ற சுலோகம் நாட்டின் மூலை முடுக்கெங்கும் தெளிவாக விளங்கிக் கொள்ளப்பட்டது.

மக்களின் ஆணையுடன் புதிய உறுப்பினர்களைக் கொண்ட புதியதொரு அரசாங்கத்தை தோற்றுவிக்கக்கூடிய புதிய தேர்தல்களுக்கான உட்கிடையான அழைப்பே அந்த சுலோகமாகும். ஊழலை இல்லாதொழிக்கவேண்டும் என்பதும் அந்த நேரத்தைய சுலோகங்களின் பட்டியலில் முதன்மையானதாக இருந்தது. ஊழல் தொடர்ந்தும் பொருளாதாரத்துக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. கடந்த வருடம் 9 சதவீதத்தினால் சுருங்கிய பொருளாதாரம் இவ்வருடம் மேலும் 4 சதவீதத்தினால் சுருங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல்களுக்கும் பொறுப்புக்கூறலுக்கும் போராட்ட இயக்கம் முன்வைத்த கோரிக்கைகளில் எதுவுமே நிறைவேறவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. மக்களின் தற்போதைய விருப்பு வெறுப்பை தெரிந்துகொள்வதற்கு உள்ளூராட்சி தேர்தல்களும் கூட நடத்தப்படவும் இல்லை, ஊழல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கோ அல்லது பொறுப்புக் கூறவைப்பதற்கு சிறிதளவேனும் நடவடிக்கை எடுக்கப்படவும் இல்லை.

நைட்ரிக் அமலத்தை ஏற்றிக்கொண்டு வந்தபோது இலங்கை கடற்பரப்பில் தீப்பிடித்து எரிந்துசுற்றுச்சூழலுக்கும் மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்துக்கும் பேரளவு அழிவை ஏற்படுத்தாய "எக்ஸ்பிரஸ் பேர்ள்" என்ற கொள்கலன் கப்பல் விவகாரத்தில் ஊழல் பிரச்சினை மீண்டும் அம்பலத்துக்கு வந்திருக்கிறது. இந்த கப்பல் அனர்த்தத்துடன் தொடர்புடைய சட்ட நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதற்கு இலஞ்சமாக இலங்கையர் ஒருவரின் வெளிநாட்டு வங்கிக் கணக்கிற்கு 25 கோடி அமெரிக்க டொலர்கள் அனுப்பப்பட்டிருப்பது தொடர்பான விபரங்கள் தனக்கு கிடைக்கப்பெற்றிருப்பதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்த அதிர்ச்சி தரும் தகவலை ஊடகங்கள் வெளியிட்டிருக்கின்றன. இந்த இலஞ்ச விவகாரம் தொடர்பில் விசாரணையை முன்னெடுக்குமாறு அவர் பொலிசாரைப் பணித்திருக்கிறார். ஆனால் அவர் அந்த இலங்கையரின் பெயரை வெளியிடத்தவறிவிட்டார். விசாரணையில் இருந்து வெளிவரக்கூடிய தகவல்களுக்காக காத்திருக்க வேண்டியிருக்கிறது.

### பொறுப்புக்கூறல் இல்லாமை

அதிகாரப் பதவிகளில் இருப்பவர்களை பொறுப்புக்கூறவைப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பது பெரும் வேதனைக்குரியது. அதேவேளை விவகாரங்கள் ஒளிவுமறைவின்றி கையாளப் படுவதாகவும் இல்லை. இந்த இரு விடயங்களையுமே தற்போது ஒடுக்கப்பட்டிருக்கும் போராட்ட இயக்கம் முக்கியமான கோரிக்கையாக முன்வைத்தது. பல விவகாரங்கள் மூடுமந்திரமாகவே இருக்கின்றன. அண்மையில் மத்திய வங்கியில் இருந்து 50 இலட்சம் ரூபா மாயமானது. இரு வாரங்களாகியும் பணம் எவ்வாறு காணாமல் போனது என்பது குறித்தோ அல்லது எவ்வாறு பிறகு கண்டுபிடிக்கப்பட்டது என்பது குறித்தோ எந்த தகவலும் இல்லை. வெளிப்படைத்தன்மையை காணமுடியவில்லை. பணம் எங்கே, யாரால் காணாமல் காணாமல் போனது என்பது குறித்து எந்த விளக்கமும் தரப்படவில்லை.

கோடிக்கணக்கான ரூபாக்களை மத்தியவங்கி அச்சிட்டுக்கொண்டிருக்கும் பின்னணியிலேயே 50 இலட்சம் ரூபா பணக்கட்டுகள் காணாமல் போனது என்பது கவனத்தில் எடுக்கப்படவேண்டியதாகும். ஒரு விசித்திரமான விடயம் என்னவென்றால் பொறுப்புக்கூறல் என்ற கோட்பாடு இலங்கையில் இருக்கிறது... ஆனால் அரசாங்கத்தில் அது நடைமுறையில் இல்லை. தனியார் வங்கிகளில் ஊழியர்கள் தங்களது கடமைகளின்போது பணத்தைக் கையாளுவதில் தவறிழைத்தால் அவர்களின் சம்பளத்தில் இருந்து அந்த பணம் அறவிடப்படுகிறது.

கீழ் மட்டங்களில் உள்ளவர்கள் மீது ஒழுங்கு கட்டுப்பாடு திணிக்கப்படும் போக்கை பொருளாதார நெருக்கடியை அரசாங்கம் கையாளுகின்ற விவகாரத்திலும் காணக்கூடியதாக இருக்கிறது. மக்கள் மீது பெருமளவு வரிகளை சுமத்தியும் பெருமளவு ஊழியர்கள் குறைப்புக்கு வழிவகுக்கக்கூடிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்துக்கொண்டுமே சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் உடன்பாட்டை செய்திருக்கிறது. பொருளாதார மறுசீரமைப்பின் சுமை நடுத்தர வர்க்கத்தவர்கள் மீதும் அவர்களுக்கு கீழ் உள்ள மக்கள் பிரிவினர் மீதும் விகிதாசாரப் பொருத்தமில்லாத வகையில் சுமத்தப்படுகிறது. நிலையான வருமானம் பெறுபவர்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்துசென்று கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் உயர்ந்தளவு வரிகளையும் செலுத்தவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு இரட்டைச் சுமை.

மறுசீரமைப்புக்கும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் விற்பனைக்கும் அரசாங்கம் விடுக்கும் அழைப்பு அரசியல் தலைவர்களின் அரசியல் ஞானத்துக்கும் தொலைநோக்கிற்குமான சான்றாக காட்சிப்படுத்தப்படுகிறது. அரசாங்க சேவை அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் பணியாளர்களைக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் நிருவகிக்கும் நிறுவனங்கள் பாரிய நட்டத்தில் இயங்குகின்றன. ஆனால் இதற்காக அரசியல் தலைவர்கள் தங்களது அரசியல் அனுகூலத்துக்காக இந்த நிறுவனங்களில் பெரும் எண்ணிக்கையில் நியமனங்களை செய்த ஊழியர்களை குறைசொல்வது நியாயமற்றதாகும்.

அரசியல் விவாதம் தலைகீழாக்கப்பட்டிருக்கிறது. தவறான முகாமைத்துவத்தின் மூலமாக பொருளாதார குற்றங்களை செய்தமைக்காக அரசியல் தலைவர்களைப் பொறுப்புக்கூற வைப்பது குறித்து அல்ல அவர்களினால் நியமிக்கப்பட்ட ஊழியர்கள் அவர்கள் செய்கின்ற வேலைக்கு பொருத்தமில்லாத அளவுக்கு பெருமளவு சம்பளத்தையும் வேறு கொடுப்பனவுகளையும் பெறுவதாக குற்றச்சாட்டை அவர்கள் மீது திருப்பும் வகையில் விவாதம் திரும்பியிருக்கிறது.

கடந்த கால தவறான பொருளாதார முகாமைத்துவம், ஊழல் மற்றும் அரசாங்கச் சொத்துக்கள் சூறையாடலுக்கு பொறுப்புக்கூற வைப்பதற்கு எந்தவொரு முயற்சியும் முன்னெடுக்கப்படாமல் இருக்கின்றமை பொருளாதார மறுசீரமைப்பு பற்றிய தற்போதைய விவாதத்தில் காணமுடியாமல் இருக்கும் இன்னொரு பரிமாணமாகும். அரசாங்கம் அந்த அரசியல் தலைவர்களைப் பொறுப்புக்கூற வைக்கவில்லை. பதிலாக போராட்ட இயக்கத்தின் உச்சக்கட்டத்தில் அந்த தலைவர்களின் வீடுகள் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டமையால் அவர்களுக்கு ஏற்பட்ட இடர்பாடுகள் மற்றும் மனவேதனைக்காக பரிவு காட்டப்படுகிறது.

அவ்வாறு பரிவு காட்டப்படுவதை விளங்கிக்கொள்ளமுடியும். ஆனால், அது பாதிப்புக்குள்ளான சகல தரப்பினர் மீதான பரிவாக இருக்கவேண்டும். சாதாரண குடிமக்களுடன் ஒப்பிடும்போது அரசியல்வாதிகள் வேறுபட்ட முறையில் நடத்தப்படுவது மக்கள் மத்தியில் கோபத்தைக் கிளறும். கடந்தகால போர், பயங்கரவாதம் மற்றும் கலவரங்களின்போது பெருமளவு குடிமக்கள் உடமைகளை இழந்தார்கள். அவர்களுக்கு அரசாங்கங்கள் உகந்த முறையில் இழப்பீடுகளை வழங்கவில்லை. கணிசமான எண்ணிக்கையானவர்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை.

### நிறைவேறக்கூடிய கனவு

ஊழல் பிரச்சினையை கையாளுவதில் அரசாங்கத்துக்கு இருக்கக்கூடிய விருப்பமின்மை அல்லது இயலாமையை அதன் வேர்களில்தான் தேடவேண்டும். அரசாங்கமும் ஜனாதிபதியும் அவர்களின் தொடர்ச்சியான இருப்புக்கு பாராளுமன்ற த்தில் பெரும்பான்மையை நம்பியிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் அணுகுமுறை குறைந்தபட்சம் நான்கு தசாப்தங்களாக இருந்த நலிவடைந்த நிலைக்கு நாட்டை கொண்டு செல்லும் வேதனையான சூழ்நிலை இருக்கிறது. பொறுப்புக்கூறலையும் மறுசீரமைப்பையும் உறுதிசெய்வதற்கு பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் தயாரில்லாததாக இருந்து வந்திருக்கிறது. அதனால் ஆளும் கட்சியினதும் அதன் தலைவர்களினதும் பணயக்கைதியாக அரசாங்கம் இருக்கிறது.

தேசிய அரசாங்கத்தை அமைப்பது குறித்து அரசாங்க உறுப்பினர்கள் சிலர் பேசத்தொடங்கியிருக்கிறார்கள். அவ்வாறு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதாக இருந்தால் ஊழலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது உட்பட உண்மையான அதிகாரப்பகிர்வை நோக்கிய முயற்சியாக தெளிவான இலக்குகளின் அடிப்படையில் அமையவேண்டும். ஊழலைக் கையாளுவதற்கு மேலாக அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதற்கு முன்னுரிமை கொடுப்பது நோக்கமாக இருக்கக்கூடாது.

மக்கள் விரும்புகின்ற துரித பொருளாதார வளர்ச்சி இலங்கையில் ஏற்படவேண்டுமானால், தவறான பொருளாதார முகாமைத்துவம், பொதுச்சொத்து சூறையாடல் மற்றும் பழைய கடன்களை மீளச் செலுத்துவதற்கு அரசாங்கங்கள் பணத்தை பெற்ற மோசடித்தனமான முதலீட்டு திட்டங்கள் ( போன்சி திட்டங்கள் ) எல்லாமே மாறவேண்டும். மக்களை அல்ல நேர்மையீனமாகவும் ஊழல்தனமாகவும் செயற்பட்டுவருகின்ற தலைவர்களையே குறைகூற வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் 25 சதவீதமானவற்றை அரசாங்கம் நிறைவேற்றியிருக்கின்ற அதேவேளை, பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பிலான கடப்பாடுகளை நிறைவேற்ற அது தவறிவிட்டது என்று முன்னணி நிபுணத்துவ நிறுவனமான "வெறைற் றிசேர்ச" சுட்டிக்காட்டியிருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டம் மீதான காலப்பொருத்தமான முன்னேற்றம் இரு பயன்களை கொண்டிருக்கிறது. முதலாவது, பல நடவடிக்கைகளில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய பொருளாதார பயன்கள். இரண்டாவது, இலங்கையின் ஆட்சிமுறையில் நம்பிக்கையை மேம்படுத்தக்கூடியதாக இருக்கும். அது பழைய கடன்சுமையை மறுசீரமைப்பதற்கு பேச்சுவார்த்தைகளை நடத்தவும் எதிர்காலப் பொருளாதார மீட்சிக்கான பயணத்தை துரிதப்படுத்தவும் உதவும்.

1970 களில் இலங்கை முக்கியமான சகல அம்சங்களிலும் (அதாவது மக்களுக்கான சமூக நலன்புரி சேவைகளை உறுதிப்படுத்தல், வெளியுறவுக்கொள்கையில் அணிசேராமை, பொருளாதாரத்தை முதலில் தாராளமயமாக்கிய தெற்காசியப் பிராந்திய வளர்முக நாடுகளில் ஒன்று) மூன்றாம் உலகின் ஒரு தலைமை நாடக விளங்கியது. உகந்த தலைமைத்துவம் இருந்தால் அந்த பாரம்பரியத்தை இலங்கை மீண்டும் தனதாக்கிக் கொள்ளமுடியும். 450 வருடகால காலனித்துவ ஆட்சிக்கும் அதனுடன் வந்த சுரண்டலுக்கும் பிறகு சுதந்திரம் பெற்ற வேளையில் இலங்கை 'கிழக்கின் சுவிட்சர்லாந்தாக" வரக்கூடிய ஆற்றலுடன் முழு ஆசியாவிலுமே பொருளாதாரத் தலைமைத்துவ நாடுகளில் ஒன்றாக விளங்கியது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இலங்கைக்கு இயல்பாக அமைந்த இயற்கை வளங்களும் அதன் மக்களின் இயல்பான ஆற்றல்களும் (புலம்பெயர்ந்த நாடுகளில் இலங்கையர்கள் சாதிக்கின்ற வெற்றிகளின் மூலமாக அந்த ஆற்றல்கள் நிரூபிக்கப்படுகின்றன) கடந்துபோன வருடங்களில் இழந்துபோன வாய்ப்புக்களை துரிதமாக எட்டிப்பிடிக்க வகை செய்யும் என்பது எமது நம்பிக்கை. ஆனால், நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஒழுக்க முறையும் சகலரையும் (வடக்கையும் தெற்கையும் வசதி படைத்தவர்களையும் வறியவர்களையும்) இந்த பயணத்தில் அழைத்துச் செல்லும் ஆர்வமும் இருக்கவேண்டியது அவசியமாகும். ●

# என்னை புலி என்று முத்திரை குத்தினால் எனக்கு பெருமையே

## சபையில் தெரிவித்த சாணக்கியன் எம். பி.

கொழும்பு, ஏப். 26

தமிழ் மக்களின் பிரச்னைகள் குறித்துப் பேசும்போது எனக்குப் புலி என்று முத்திரை குத்தினால் அதுவே எனக்கு அது பெருமை என்று தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இன்றைய (நேற்றைய) சபை அமர்வின் ஆரம்பத்தில் எனக்கு உரையாற்றுவதற்கு போதிய நேரம் வழங்கப்படவில்லை. அதனை நான் மீண்டும் மீண்டும் கேட்டபோது அமைச்சர் மனுச நாணயக்கார என்னைப் புலி எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த சபையில் அநேகமான உறுப்பினர்களுக்கு அவர்களது கேள்விகளை கேட்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது. எனக்கு போதிய நேரம் வழங்கப்படவில்லை.

கிழக்கு மாகாணத்தை நான் பிரதிநித்துவப்படுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் எனது கட்சி சார்பாக அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றவன். மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வு ரீதியான பிரச்னையொன்று அண்மைக்காலமாக காணப்படுகின்றது.

சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் போக்குவரத்து பிரச்னையை எதிர்கொண்டுள்ளனர். மாகாண சபைகள் தற்போது இயங்குவதில்லை. இவ்விடயம் தொடர்பாக மாகாண ஆளுநரும் அது தொடர்பில் அசமந்த போக்கையே கடைப்பிடித்து வருகின்றார். அவர் ஓர் இனவாதியைப் போலவே செயல்பட்டு வருகின்றார். சிங்கள மக்களின் காவலர் என்ற இனவாத போக்கிலேயே கிழக்கு மாகாண ஆளுநர் செயல்பட்டு வருகின்றார்.

போக்குவரத்து பிரச்னையை அந்த மக்கள் எதிர்கொண்டுள்ளனர். இதற்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதற்காகவே நான் இன்று இந்த சபையில் போக்குவரத்து அமைச்சரிடம் அது தொடர்பிலான கேள்வியை முன்வைத்தேன்.

நான் முன்வைத்த பிரச்னை என்பது உணர்வு ரீதியான பிரச்னை இல்லை என்று பிரதி சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். அம்பாந்தோட்டையில் பிரச்னை ஒன்று ஏற்பட்டால் அது உணர்வு ரீதியிலான பிரச்னையாக இருக்கும். நான் எனது மக்களின் பிரச்னையை சபைக்கு எடுத்துக்கூறும் எனது ஒலிவாங்கியை நிறுத்துகின்றனர்.

ஓர் அமைச்சரவை அமைச்சர் என்னை புலி என்று அழைக்கின்றார். என்னை இனவாதி என்று அழைக்கின்றார்கள். வெளிவிவகார அமைச்சரும் நீதி அமைச்சரும் இந்த சபையில் மறுசீரமைப்பில் சம்பியன் என்று அவர்கள் தங்களைப் புகழாரம் சூட்டிக்கொள்கின்றார்கள்.

அண்மையில் தென்னாபிரிவுக்கு இன்பச் சுற்றுலாவை மேற்கொண்டு நல்லிணக்கம் தொடர்பிலான கற்றலில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். நல்லிணக்கம் தொடர்பில் கற்றுவந்த அமைச்சர் அலி சப்ரி, நான் எனது மக்கள் குறித்து கூறும் போது அதனை அலட்சியப்படுத்துகின்றார்.

எனது மக்களின் பிரச்னையை இந்த பாராளுமன்றத்தில் கூறுவதால் எனக்கு புலி என்று பெயர் வைப்பார்களேயாயின் அதனை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றேன்.

என்னை புலி என்று நீங்கள் கூறுங்கள். ஆட்சேபனை இல்லை. தமிழ் மக்களது பிரச்னையை பேசும் போது அதற்கு நீங்கள் புலி என்று முத்திரை குத்துவீர்களேயாயின் அதுவே இந்த நாட்டினுடைய சாபக்கேடு - என்றார். (ஐ)

# எந்தக் கூட்டணியிலும் இணைய மாட்டோம்!

## சிறீ லங்கா சுதந்திர கட்சி



கொழும்பு, ஏப். 26

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் அமைக்கப்படவுள்ள பொதுக் கூட்டணியில் சிறீ லங்கா சுதந்திர கட்சியும் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை உண்மைக்கு புறம்பானது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பிரதான எதிர்க்கட்சிகளுக்கிடையில் இடம்பெற்ற விசேட சந்திப்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பொதுக் கூட்டணியை அமைப்பதற்கு சகலரும் இணக்கம் தெரிவித்ததாக லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் ஊடகவியலாளர் மாநாடொன்றை ஏற்பாடு செய்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனை மறுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

சுதந்திரக் கட்சி வேறு எந்த கட்சியுடனும் கூட்டணியமைக்கவில்லை. இனிவரும் காலங்களிலேயே தேர்தல்களில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து தீர்மானிக்கப்படும்.

தற்போது ஒவ்வொரு மாவட்டங்களிலும் கட்சியின் மறுசீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, நாம் கட்சியின் தனித்துவத்தன்மையைப் பாதுகாக்கும் வகையிலேயே தீர்மானங்களை எடுப்போம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டு ஒப்பந்தம் மீதான விவாதத்தின் போது எம்மால் ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயங்கள், ஏற்றுக் கொள்ள முடியாத விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் அறிவிப்போம். ஊழல் , மோசடி சட்ட மூலம் உள்ளிட்ட ஏற்றுக் கொள்ளக் கூடிய மிக முக்கிய தீர்மானங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

இவ்வாறு ஏற்றுக் கொள்ளக் கூடியவற்றுக்கு வாக்களிக்க முடியும். எனினும் ஏற்றுக் கொள்ள முடியாத விடயங்கள் தொடர்பில் திருத்தங்களை முன்வைப்போம். இதே போன்று புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பில் எமது நிலைப்பாடு மற்றும் திருத்தங்களையும் முன்வைப்போம் - என்றார். (ஐ)






# கட்டாய வரவுக்குழுவுக்கு பொறுப்பான ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள்



மட்டக்களப்பு, ஏப். 26

பட்டிருப்புக்கல்வி வலயத்தில் முறைசாராக்கல்விப்பிரிவினரால் பட்டிருப்பு கல்வி வலயத்தில் கட்டாய வரவுக்குழுவிற்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வழங்கி வைக்கும் நிகழ்வு பட்டிருப்பு வலயத்தின் கேட்போர் கூடத்தில் வலயக்கல்விப்பணிப்பாளர் சிவானந்தம் - சிறிதரன் தலைமையில் நடைபெற்றது.

கட்டாயகல்வி பிரகடனங்களை நடைமுறைப் படுத்துவதற்காக 1963/30 அதி விசேட வர்த்தமானி அறிவுறுத்தலுக்கமைய பாடசாலைகளில் கட்டாயக்கல்வி வரவுக்குழுக்களின் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்காகவும் வலயத்திலுள்ள 70 பாடசாலைகளிலும் இருந்து ஒரு ஆசிரியருக்கு கட்டாயக்கல்வி வரவுக்குழுவிற்கு ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட்டு நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன.

இதில் போரதீவுப்பற்று கோட்டக்கல்விப்பணிப்பாளர் த.அருள்ராஜா பட்டிருப்பு கல்வி வலய முறைசாராக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி செ.நடராஜதுரைரை, முறைசாராக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி நீ.கலைச்செல்வன் மற்றும் வலயக்கல்விஅலுவலக முறைசாராக்கல்வி உத்தியோகத்தர்கள், பிரதேசசெயலக சிறுவர்பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு கட்டாயக்கல்வி, இடைவிலகலைத் தவிர்த்தல், பாடசாலைக்கு மாணவர் வரவு ஒழுங்கீனம் அதனைத் தவிர்த்தல் தொடர்பாக கருத்துரைகள் வழங்கினர். (அ)

# உடல் உறுப்புகளை தானம் செய்து ஐவருக்கு வாழ்வளித்த மட்டு. இளைஞர்

மட்டக்களப்பு, ஏப். 26

**மட்டக்களப்பு சித்தாண்டியில் இடம்பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்த இளைஞனின் 5 உடல் உறுப்புக்கள் தானம் செய்யப்பட்ட நெகிழ்ச்சிச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

வயல்வேலை முடித்து கிரான் பகுதியிலிருந்து சித்தாண்டியிலுள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது பிரதான வீதியில் கிரானுக்கும் சித்தாண்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டன.

இதில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இந்திரசேன ரேனுஜன் (வயது 29) படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தின் போது படுகாயமடைந்த அவர், மூளைச்சாவு அடைந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்ததை அடுத்து வைத்தியர்களின் ஆலோசனையுடன் அவரது உடலுறுப்புக்களைத் தானம் செய்ய குடும்பத்தினர் முன்வந்தனர்.

அதனடிப்படையில் மூளைச் சாவடைந்த ரேனுஜனின் சிறுநீரகங்கள், கல்லீரல், நுரையீரல், இதயம் ஆகிய அவயவங்கள் தேவையுடையோருக்கு பொருந்தும் வகையில் தானம் செய்யப்பட்டதாக ரேனுஜனின் சகோதரி இந்திரசேன கிரிஷாந்தினி தெரிவித்தார்.

தமது சகோதரனை இழந்தது ஆறாத் துயரமாக இருந்தபோதிலும் தமது சகோதரனின் உடல் உறுப்புக்கள் 5 பேருக்கு வாழ்வளிக்கும் என்பதில் தமது சகோதரன் சாகா வரம் பெற்றுள்ளதாக நினைத்து தமது குடும்பத்தினர் பெருமையடைவதாக கிரிஷாந்தினி கூறினார். (அ)

# வெல்லாவெளி கலைமகள் ம.வியில் சிரமதானப் பணிகள் முன்னெடுப்பு



மட்டக்களப்பு, ஏப். 26

வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயத்தில் மாபெரும் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயத்திற்கு புதிய அதிபர் கடந்த வாரம் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம். மற்றும் கல்விச் சமூகம் போன்றோர் பாடசாலைக்கு அழைக்கப்பட்டு சங்கங்கள் சீரமைக்கப்பட்டன.

மேற்படி சங்கங்கள் இணைந்து கல்வி அபிவிருத்தி, வள அபிவிருத்தி போன்ற விடயங்களை துரிதமாக மேற் கொள்ளவதற்கான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஒன்றிணைந்து பாடசாலை வளாகத்தில் மாபெரும் சிரமதானப் பணியை மேற்கொண்டனர். (அ)

# கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினரின் வீடு மீது தாக்குதல்!

அக்கரைப்பற்று, ஏப். 26

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனின் வீடு நேற்று முன்தினம் நள்ளிரவு தாக்குதலுக்கு உள்ளானது .

கல்முனை பெரிய நீலாவணைப் பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டிற்கு ஒரு மணி அளவில் வந்த இனந்தெரியாத கோஷ்டினர் பிரதான வாயிலை உடைத்து உள்நுழைந்ததாக பொலிஸில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரியநீலாவணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சந்திரசேகரன் ராஜன் நேற்றைய வடக்கு-கிழக்கு கடை அடைப்பு முன்னிட்டு கல்முனை பிராந்தியத்திலுள்ள கடைகளை அடைக்குமாறும் கோரி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது .

இதன் எதிரொலியாக இந்த தாக்குதல் நடந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது. (அ)

# புதுவருட விளையாட்டு விழா சாய்ந்தமருதில்

அக்கரைப்பற்று, ஏப். 26

தமிழ், சிங்கள புது வருட மற்றும் ரமழான் பெருநாளை முன்னிட்டு சாய்ந்தமருது பொலிஸ், பொதுமக்கள் பாதுகாப்பு குழுவுடன் இணைந்து நடத்திய விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது பௌசி விளையாட்டு மைதானத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பல்லின மக்களும் கலந்து கொண்டு கலை, கலாசார, விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றதோடு, இதில் மும் மத மக்களும் கலந்து கொண்டனர் .

நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி. ஜயந்த ரட்னாயக்க கலந்துகொண்டார். கல்முனை பொலிஸ் அத்தியட்சகர் லசந்த புத்திக, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், மோட்டார் போக்குவரத்து திணைக்க ஆணையாளர் ஏ.எல்.எம்.பாறுக் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டதுடன் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுப் பொருட்களும் அதிதிகளால் வழங்கப்பட்டன. (அ)





# ஆணொருவரின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, ஏப். 26

மட்டக்களப்பு நகர், முனை வீதி 2ஆம் குறுக்கு வீதியிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பொது மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் அப்பகுதியில் யாசகம் பெற்று வந்துள்ளதாகவும், அவர் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை எனவும் தெரியவந்துள்ளது. பொலிஸார் நீதிமன்ற அனுமதியை பெற்றுச் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இவர் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் அறிவிக்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரியுள்ளனர். (அ)

# மட்டக்களப்பு செயலகம் நடத்தும் சித்திரை வசந்தம் புதுவருட நிகழ்வு

மட்டக்களப்பு, ஏப். 26

தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் இலங்கை பொலிஸ்,

இலங்கை இராணுவம், மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து பெருமையுடன் நடத்தும் சித்திரை வசந்தம் - 2023 மிகவும் கோலாகலமாக மட்டக்களப்பில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜா தலைமையில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் இரவு 11.00 மணிவரை பல்வேறு பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளும் மாலை நேர இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வானது காலை 6.30 மணிக்கு காந்திப்பூங்காவில் இருந்து இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டமும் மரதன் ஓட்டமும், காலை 8.30 மணிக்கு முகத்துவாரத்தில் இருந்து மட்டக்களப்பு நுழைவாயில் வரையிலான தோணி ஓட்டமும் பிற்பகல் 2 மணிக்கு வழுக்கு மரம் ஏறுதல், தலையணைச்சமர், முட்டி உடைத்தல் புதுவருட அழகன் அழகி போட்டி போன்ற போட்டி நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து காலை 11 மணிக்கு உள்ளூர் வியாபார முயற்சியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் அதிதிகளினால் திறந்துவைக்கப்படவுள்ளதுடன், இதில் பாரம்பரிய உணவுக் கூடங்கள் மற்றும் உள்ளூர் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சி மற்றும் விற்பனை கூடங்கள் என்பன இடம்பெறவுள்ளன. (அ)

# குற்றக்கும்பலை சேர்ந்த 13 பேரை பிடித்து ரயர் போட்டு எரித்து கொன்றனர் மக்கள்!

## ஹெய்ட்டியின் தலைநகரில் பரப்பு


**போர்ட்-ஓ-பிரின்ஸ், ஏப். 26**

**ஹெய்ட்டியின் தலைநகரான போர்ட்-ஓ-பிரின்ஸில் குற்றக்கும்பல் உறுப்பினர்கள் 13 பேரை பொதுமக்கள் அடித்துக் கொன்று, பெற்றோல் ஊற்றி எரித்துள்ளனர்.**

நேற்று முன்தினம் திங்கள்கிழமை இந்த அதிர்ச்சி சம்பவம் நடந்தது.

ஜூலை 2021 இல் ஜனாதிபதி ஜோவெனல் மோஸ் படுகொலை செய்யப்பட்டதிலிருந்து தலைநகரின் 60 வீத பகுதிகள் கிரிமினல் கும்பல்கள் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளன. சட்ட விரோதமான சூழ்நிலையின் மீதான பொதுமக்களின் கோபத்தை இந்த கொடூரமான வன்முறை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

"பொலிஸாரின் ஒரு அறிக்கையில், ஆயுதம் ஏந்திய நபர்கள் இருந்த ஒரு மினிபஸ்ஸை சோதனையிட்டபோது, ஆயுதங்கள் மற்றும் பிற உபகரணங்களை பறிமுதல் செய்தனர். கூடுதலாக, இந்த வாகனத்தில் பயணித்த ஒரு டசினுக்கும் மேற்பட்ட நபர்கள் துரதிர்ஷ்டவசமாக கோபமடைந்த பொதுமக்களால் கொல்லப்பட்டனர்"



என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமைமாலை அருகிலுள்ள சுற்றுப்புறத்தில் மேலும் ஆறு எரிந்த உடல்கள் போடப்பட்டிருந்தன. சில சாட்சிகள் பொலிஸ் அவர்களைக் கொன்றதாகவும், குடியிருப்பாளர்கள் தீ வைத்ததாகவும் கூறினார். ஆனால் தகவல்களை சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை.



# மியன்மாரை தாக்கிய சூறாவளியில் 8 பேர் பலி!

*நைப்பிட்டோ, ஏப். 26*

மியன்மாரை கடுமையாக சூறாவளி புயல் காற்று தாக்கியுள்ளது. இந்த சூறாவளியில் சிக்கி 8 பேர் உயிரிழந்துள்ளனர். 128 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தலைநகர் நைப்பிட்டோ அருகில் உள்ள இரண்டு கிராமங்களில் வெள்ளிக்கிழமை மாலை கடுமையாக வீசிய புயல் காற்றில் 232 வீடுகள் சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு

## 12 பேர் உயிரிழப்பு, 57 பேர் காயம்

*இஸ்லாமாபாத், ஏப். 26*

பாகிஸ்தான் பொலிஸ் நிலையமொன்றில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானுக்கு அருகிலுள்ள கைபர் பக்துன் கவா மாகாணத்தின், காபால் நகரில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது 57 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)



# இந்தோனேசியாவில் அதிகாலை நிலஅதிர்வு

## சுனாமி எச்சரிக்கை விடுப்பு

*ஜகார்த்தா, ஏப். 26*

இந்தோனேசியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 7.3 ஆக பதிவாகியுள்ளது.

இந்தோனேசியா நேரப்படி அதிகாலை 3 மணியளவில் பூமிக்கு அடியில் 84 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சுமத்திரா தீவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் அங்கு உடனடியாக சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு உள்ளூர் அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர். (அ)

# பொதுத் தேர்தலை முன்பே நடத்தும் திட்டம் கிடையாது

## ஜப்பான் பிரதமர் தெரிவிப்பு



*ரோக்கியோ, ஏப். 26*

பொதுத் தேர்தலை முன்கூட்டியே நடத்தும் திட்டம் இல்லை என்று ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் அடுத்த மாதம் நடைபெறும் ஜி-7 உச்சி மாநாட்டுக்கு பின்னர், பிரதமர் புமியோ கிஷிடா பாராளுமன்றத்தை கலைத்துவிட்டு தேர்தலை நடத்த திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் பரவி வந்தன.

இந்த நிலையில் பொதுத்தேர்தலை முன்கூட்டியே நடத்தும் எந்த திட்டமும் தன்னிடம் இல்லை என ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். (அ)

# இத்தாலி செல்ல முயன்ற 93 அகதிகள் கடலில் மீட்பு

*துனிசியா, ஏப். 26*

ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த அகதிகள் துனிசியா வழியாக இத்தாலியில் சட்டவிரோதமாக குடியேறுவதை தடுக்க துனிசியா அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அதன் ஒரு பகுதியாக துனிசியா கடல் வழியாக இத்தாலி செல்ல முயன்ற 3 படகுகளை அந்த நாட்டின் கடலோரா காவல்படையினரால் தடுத்து நிறுத்தி படகுகளில் இருந்த 93 அகதிகளை மீட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில், துனிசிய தேசிய காவல்படையின் ஊடகப் பேச்சாளர் ஹூஸ்மெடின் ஜபாப்லி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில், சட்டவிரோத குடியேற்றத்திற்கு எதிரான போராட்டத்தின் ஒரு பகுதியாக, சனிக்கிழமை இரவு இதுபோன்ற மூன்று முயற்சிகள் முறியடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சூடானில் இருந்து பிரெஞ்சு பிரஜைகள் மீட்கப்பட்டனர்!

## தூதரகம் மூடப்பட்டது!!

*பாரிஸ், ஏப். 26*

சூடான் தலைநகரில் இருந்து பல நாடுகளும் தங்கள் பிரஜைகளை வெளியேற்றத்தொடங்கியுள்ளன.

அங்கு சிக்குண்டிருந்த ராஜதந்திரிகள், தூதரகப் பணியாளர்கள் உட்பட சுமார் 250 பிரெஞ்சுப் பிரஜைகளை மீட்டு வான் வழியாக அயல் நாடொன்றுக்கு இடம்மாற்றும் "விரைவுப் படை நடவடிக்கை" ஒன்றைப் பாரிஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்துள்ளது. மோதலில் ஈடுபட்டிருக்கின்ற சூடானிய இராணுவம் மற்றும் "விரைவு ஆதரவுப் படைகள்" என அழைக்கப்படும் துணைப்படை ஆகிய இரு தரப்புகளினதும் இணக்கத்துடன் இந்த மீட்புப் பணி இடம்பெறுவதாக பிரான்ஸின் வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

ஆபத்தான இந்த நடவடிக்கையின் போது பிரான்ஸின் தூதரகத்தில் இருந்து காட்டூம் விமான நிலையம் நோக்கிப் புறப்பட்ட வாகன அணி மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக ஒரு தகவல் வெளியாகியிருக்கிறது. அதில் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தத் தாக்குதலுக்கு மோதலில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்புகளும் மாறி மாறி ஒருவர் மீது மற்றவர் குற்றம் சுமத்தி உள்ளன.

தொடரும் தாக்குதல்களுக்கு மத்தியில் சுமார் 200 பேர் அடங்கிய முதலாவது தொகுதியினர் காட்டூம் விமான நிலையத்தில் இருந்து இராணுவ விமானம் மூலம் சூடானின் எல்லையில் உள்ள ஜிபூட்டி நாட்டில் அமைந்திருக்கும் பிரெஞ்சுப் படைத் தளத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இரண்டாவது அணியில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த 300 பேரைப் பிரெஞ்சுப் படையினர் வெளியேற்றியுள்ளனர்.

ராஜதந்திரிகளும் பணியாளர்களும் வெளியேறியதைத் தொடர்ந்து பிரான்ஸின் தூதரகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக பாரிஸில் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை - சூடானில் கடுமையான மோதல்கள் இடம்பெறுகின்ற தலைநகர் காட்டூமில் அமெரிக்கத் தூதரகத்தில் சிக்குண்டிருந்த நூறு பேர் வான் வழியாக மீட்கப்பட்டிருக்கின்றனர். அமெரிக்காவின் மூன்று ராணுவக் ஹெலிக்கொப்டர்கள் சனியன்று இரவு தூதரகப் பகுதியில் தரையிறங்கி ராஜதந்திரிகள் உட்பட அனைவரையும்

பாதுகாப்பாக மீட்டன. நெதர்லாந்து துருக்கி, ஜேர்மனி, இத்தாலி உட்படப் பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் சூடானில் தங்கியுள்ள தத்தமது பிரஜைகளைப் பாதுகாப்பாக மீட்கும் திட்டங்களை முன்னெடுத்துள்ளன.



இங்கிலாந்து அதன் ராஜதந்திரிகளை தலைநகரில் இருந்து பாதுகாப்பாக வெளியேறியுள்ளது.

தலைநகரின் விமான நிலையம் சண்டை நடைபெறும் களமாக மாறியுள்ளதால் வான்வழி மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

ஐ. நா. உட்பட சர்வதேச நாடுகள் போரை நிறுத்த முயன்ற போதிலும் போர் நிறுத்தங்கள் வெற்றியளிக்கவில்லை. (அ)




# ஷார்ஜா மைதானத்தில் 'சச்சின் ஸ்ரான்ட்'

ஷார்ஜா, ஏப். 26

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கரின் பெயர் ஷார்ஜா கிரிக்கெட் மைதானத்தின் ஒரு பகுதிக்கு சூட்டப்பட்டுள்ளது. அவரது 50ஆவது பிறந்த நாளன்று இந்த கௌரவத்தை அவருக்கு வழங்கி உள்ளது ஷார்ஜா கிரிக்கெட் மைதான நிர்வாகம்.

அதோடு ஷார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் சச்சின் பதிவு செய்த அந்த இரண்டு சதங்களின் 25ஆவது ஆண்டு கொண்டாட்டமாகவும் இது அமைந்துள்ளது. கடந்த 1998இல் ஷார்ஜா மைதானத்தில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஏப்ரல் 22 மற்றும் 24 ஆகிய திகதிகளில் அடுத்தடுத்து இரண்டு சதங்கள் பதிவு செய்திருந்தார் சச்சின்.

கிரிக்கெட் விளையாட்டுக்காக சச்சின் அளித்த பங்களிப்புக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்க விரும்பினோம். அதனால் எங்களால் முடிந்த இதை செய்துள்ளோம் என ஷார்ஜா மைதானத்தின் பிரதம நிறைவேற்றதிகாரி கலாஃப் புகாரீர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையுடனான டெஸ்ட் அயர்லாந்து 492 ஓட்டங்கள்!

காலி, ஏப். 26

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அயர்லாந்து அணி முதல் இன்னிங்ஸில் 492 ஓட்டங்களை குவித்துள்ளது.

இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடருக்காக அயர்லாந்து அணி இலங்கை வந்துள்ளது. முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அபார வெற்றி பெற்றது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் காலியில் தொடங்கியது.

இதில், நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது அயர்லாந்து அணி. முதல் 3 விக்கெட்களை குறைந்த ஓட்டங்களுக்கு இழந்தது.

ஆரம்ப வீரர்களான பீற்றர் முவர் (5), ஜேம்ஸ் மெக்கலம் (10), ஹெரி டெக்டர் (18) ஆகிய மூவரும் குறைந்த ஓட்டங்களுடன் விக்கெட்களை இழந்தனர்.

ஹெரி டெக்டருடன் 3ஆவது விக்கெட்டில் 46 ஓட்டங்களைப் பகிர்ந்த அண்டி பெல்பேர்னி, 4ஆவது விக்கெட்டில் மேலும் 115 ஓட்டங்களை போல் ஸ்ரேர்லிங்குடன் பகிர்ந்தார்.

போல் ஸ்ரேர்லிங் 133 பந்துகளை எதிர்கொண்டு 6 பவுண்டறிகள், 3 சிக்ஸ்களுடன் 74 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது தசைப் பிடிப்புக்குள்ளாகி ஓய்வுபெற்றார்.

மறுபக்கத்தில் திறமையாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த அண்டி பெல்பேர்னி 95 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவர் 5 ஓட்டங்களால் கன்னி சதத்தைத் தவறவிட்டார். 163 பந்துகளை எதிர்கொண்ட பெல்பேர்னி 12 பௌண்ட்றிகளை அடித்திருந்தார்.

அடுத்து சேர்ந்த லோர்க்கன் டக்கரும் கேர்ட்டிஸ் கெம்பரும் பிரிக்கப்படாத 5ஆவது விக்கெட்டில் 87 ஓட்டங்களை பகிர்ந்திருந்தபோது முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அயர்லாந்து அணி 4 விக்கெட் இழப்புக்கு 319 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

லோர்க்கன் டக்கர் 102 பந்துகளில் 10 பௌண்ட்றிகளுடன் உட்பட 78 ஓட்டங்களுடனும் கேர்ட்டிஸ் கெம்பர் 27 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்த




னர். நேற்று தொடர்ந்த ஆட்டத்தில் லோர்கன் டக்கர் மேலதிகமாக 2 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் தசைப்பிடிப்பால் ஓய்வு பெற்ற போல் ஸ்ரேர்லிங் மீண்டும் களம் புகுந்தார். கெம்பரும் ஸ்ரெர்லிங் அபாரமாக ஆடினார். ஸ்ரேர்லிங் சதம் அடித்து அசத்த அவரைத் கெம்பரும் சதம் கடந்தார்.

நேற்றைய தினம் 14.3 ஓவர்களில் அயர்லாந்து அணி முதல் இன்னிங்ஸுக்காக 492 ஓட்டங்களை குவித்திருந்தது.

இலங்கையின் பந்துவீச்சில் பிரபாத் ஜெயசூரிய 5, விஸ்வ பெர்னாண்டோ, அசித பெர்னாண்டோ தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடும் இலங்கை, நேற்று ஆட்டம் முடிவடைந்தபோது 81 ஓட்டங்களை விக்கெட் இழப்பின்றி பெற்றிருந்தது.

தொடக்கம் கொடுத்த நிஷான் மதுஷ்க 41, திமுத் கருணாரட்ண 39 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமாகும்.

# டில்லி கப்பிட்டல்ஸ் அணியை வீழ்த்தி ஹைதராபாத் இரண்டாவது வெற்றி!

ஹைதராபாத், ஏப். 26

ஐ. பி. எல்லின் 34ஆவது லீக் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை வீழ்த்தி டில்லி கப்பிட்டல்ஸ் அணி இந்த தொடரில் இரண்டாவது வெற்றியை பதிவு செய்தது.

145 ஓட்டங்கள் என்ற எளிய இலக்கை துரத்திய சன்ரைசர்ஸ் அணிக்கு ஹாரி ப்ரூக் இம்முறையும் ஏமாற்றினார். 7 ஓட்டங்களுக்கு அவர் முதல் விக்கெட்டானாலும், மற்றொரு தொடக்க வீரர் மயங்க் அகர்வால் பொறுப்பாக விளையாடி 49 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். ஆனால், அவருக்கு பக்கபலமாக மற்ற வீரர்கள் சிறப்பாக செயல்படவில்லை.

ராகுல் திரிபாதி 21 பந்துகளுக்கு 15 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். அபிஷேக் ஷர்மா, அணித் தலைவர் அய்டன் மார்க்ரம் ஆகியோர் ஒற்றை இலக்கத்தில் விக்கெட்டாக, ஹென்ரிச் கிளாசென் அதிரடியாக 31 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். வாஷிங்டன் சுந்தர் அதிரடி காட்டினாலும், இறுதி ஓவரில் வெற்றிக்கு 13 ஓட்டங்கள் தேவைப்பட்டபோது அவரால் அதை எடுக்க முடியவில்லை.

கடைசி ஓவரை இம்பேக்ட் ப்ளேயர் முகேஷ் குமார் திறமையாக வீசி ஐந்து ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்தார். டில்லி அணிக்கு இரண்டாவது வெற்றியை தேடிக்கொடுத்தார். 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 137 ஓட்டங்கள் மட்டுமே எடுத்த சன்ரைசர்ஸ் 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

டில்லி அணி தரப்பில் நோர்ட்ஜே, அக்சர் பட்டேல் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

ஹைதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி இன்டர்நேஷனல் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணி பந்துவீச்சை தெரிவு செய்தது. அதன்படி 3ஆவது பந்திலேயே பிலிப் சால்ட் விக்கெட்டாகி டில்லி ரசிகர்களுக்கு அதிர்ச்சியளித்தார். அடுத்து வந்த மிட்செல் மார்ஷை நடராஜன் எல். பி. டபிள்யூ முறையில் வெளியேற்றினார். கடந்த போட்டிகளில் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய டேவிட் வோர்னர் 21 ஓட்டங்களில் கிளம்பினார்.

சர்பராஸ்கானும், அமன் ஹக்கீம் கானும் ஆட்டமிழக்க7ஆவது ஓவரில் மட்டும் 3 விக்கெட்களை எடுத்தார் வாஷிங்டன் சுந்தர். இதனால் 10 ஓவர் முடிவதற்குள் 5 விக்கெட்டை பறிகொடுத்த டில்லி அணி 72 ஓட்டங்களை மட்டுமே சேர்த்திருந்தது.

அக்சர் பட்டேல், மணீஷ் பாண்டே நிதானமாக ஆடி விக்கெட் இழப்பை தடுக்க முயற்சித்தாலும் விதி அக்சர் பட்டேலை விடவில்லை. புவனேஷ்குமார் பந்தில் போல்டாகி இந்த ஆட்டத்தில் அணியின் தனிநபர் ஓட்டங்களில் அதிகபட்சமாக 34 ஓட்டங்களைச் சேர்த்துவிட்டு கிளம்பினார். அதே ஓட்டத்துடன்ரன்அவுட்டாகி மனீஷ் பாண்டேவும் கிளம்பினார். ரிபால் பட்டேல், அன்ரிச் நோர்ட்ஜே அடுத்தடுத்து ரன்அவுட்டாக நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்களை இழந்த டில்லி அணி 144 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது.

ஹைதராபாத் அணி தரப்பில் வாஷிங்டன் சுந்தர் 3 விக்கெட்களையும், புவேனஷ்குமார் 2 விக்கெட்களையும், நடராஜன் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)






# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இந்திய அணி அறிவிப்பு!

மும்பை, ஏப். 26

எதிர்வரும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான இந்திய அணியை அறிவித்துள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு எதிராக வரும் ஜூன் 7ஆம் திகதி இங்கிலாந்தில் உள்ள ஓவல் கிரிக்கெட் மைதானத்தில் இந்த இறுதிப் போட்டி நடைபெற உள்ளது.

அடுத்தடுத்து இரண்டு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் பங்கேற்கும் அணி என்ற அந்தஸ்தை இதன் மூலம் இந்திய அணி பெறுகிறது. கடந்த முறை நியூசிலாந்து அணிக்கு எதிராக உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்திய அணி விளையாடி இருந்தது குறிப்பிடத்தக்கது.

அணி விவரம், ரோஹித் சர்மா (அணித் தலைவர்), ஷுப்மன் கில், புஜாரா, விராட் கோலி, ரஹானே, கே. எல். ராகுல், கே. எஸ். பரத் (விக்கெட் காப்பாளர்), அஸ்வின், ஜடேஜா, அக்சர் பட்டேல், ஷர்துல் தாகூர், முஹமது ஷமி, சிராஜ், உமேஷ் யாதவ், ஜெயதேவ் உனாட்கட்.

15 வீரர்கள் இடம் பெற்றுள்ள இந்த அணியில் ரஹானே சுமார் ஓராண்டுக்கு பிறகு அணிக்குள் மீள வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தன்பாலின ஈர்ப்பாளரை குற்றவாளிகளாக கருதும் சட்டங்களை உடன் நீக்கவேண்டும்!

## ஐ.நா. சிறுவர் உரிமைகள் குழு வலியுறுத்து

கொழும்பு, ஏப். 26

**தன்பாலின ஈர்ப்பாளர்கள் மற்றும் மாற்றுபாலினத்தவர்களை குற்றவாளிகளாக கருதும் சட்டங்களை நீக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் குழு, இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் கீழ் இலங்கை தனது கடமைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கு பொறுப்பான ஐ.நா சிறுவர் உரிமைகள் குழு, தன்பாலின உறவுகளை குற்றமாக்கும் சட்டங்களை ரத்து செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

இலங்கை தொடர்பான அதன் 5 ஆவது மற்றும் 6ஆவது கால அறிக்கையின் 16 ஆவது பந்தியில், மாற்றுப்பாலின மக்களுக்கு எதிரான பாகுபாட்டை எதிர்த்துப் போராடவும், அவர்களுக்கு எதிரான துன்புறுத்தலைத் தடுக்கவும், அவர்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபடுபவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தவும் இலங்கை அரசாங்கத்திடம் அந்தக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை, அந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டதுடன், "சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு இணங்க அவற்றைக் கொண்டுவருவதற்காக" தண்டனைச் சட்டச் சீர்திருத்தங்களுக்கு உறுதியளித்துள்ளதாகவும் அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், குற்றவியல் சட்டத்தின் தற்போதுள்ள பிரிவு 365 மற்றும் 365 ஏயின் கீழ், சிறுவர்கள் "குற்றவாளிகளாகக் கருதப்படுகிறார்கள்" என்பதையும் அந்தக் குழு எடுத்துக்காட்டுகிறது. "சட்டம் காலனித்துவ காலத்திலிருந்து மரபுரிமையாகப் பெறப்பட்டது என்றும், தற்போதைய அரச நடைமுறையின் கீழ், சிறுவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவதில்லை" என்றும் இலங்கை அரசாங்கம் தெளிவுபடுத்தியது.

முன்மொழியப்பட்ட குற்றவியல் (திருத்தம்) சட்டமூலம் பிரிவு 365 ஐ திருத்துவது மற்றும் பிரிவு 365 ஏயை ரத்து செய்வது, சிறுவர்களுக்கு தீங்கு விளைவிப்பதுடன், சிறுவர்களுக்கான இலங்கையின் ஐ.நாவுக்கான வாக்குறுதிகளை மீறப்படுகிறது என்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் ஷர்மிளா கோனவல தலைமையிலான நகர்ப்புற குடிமக்கள் போன்ற அமைப்புகளால் பரப்பப்படுகின்ற பொய்யான கதைகளை ஐ.நா சிறுவர் உரிமைகள் குழுவின் வலுவான அறிக்கை நேரடியாக சவால் செய்கிறது.

100 க்கும் மேற்பட்ட சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் மற்றும் சட்டத்தரணிகள் சிறுவர் பாதுகாப்புப் படை மற்றும் சிறுவர் வன்கொடுமை தடுப்பு அறக்கட்டளை மற்றும் பிற தொழில் வல்லுநர்கள் ஆகியோர் தண்டனை (திருத்தம்) சட்டமூலத்துக்கு ஆதரவாக சமீபத்தில் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

இந்தச் சட்டத்தை இயற்றினால் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக நேரிடும் என்று பரப்பப்படும் பொய்களை நம்ப வேண்டாம் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# புதிதாக தேசிய கல்விக் கொள்கையை தயாரிக்க ஜனாதிபதி தலைமையில் குழு!

கொழும்பு, ஏப். 26

எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கான புதிய கல்விக் கொள்கையை தயாரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக ஜனாதிபதி தலைமையில், பிரதமர், கல்வி அமைச்சர் உள்ளடங்கலாக 10 பேரடங்கிய அமைச்சரவை உப குழுவை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# வாக்காளர் பட்டியல் தயாரிப்பு ஆரம்பம்

கொழும்பு, ஏப். 26

2023ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கிராம அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று தகவல்களை சேகரிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்தார்.

புதிய பெயர்கள் சேர்ப்பது மற்றும் பெயர் நீக்கம் குறித்து விசாரணை நடத்தி பிரதான ஆவணம் தயாரிக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# ரயில் திணைக்கள பழைய இரும்புகளை விற்பதற்கு சர்வதேச விலை மனு கோரல்!

## அமைச்சர் பந்துல கூறுகிறார்



கொழும்பு, ஏப். 26

ரயில் திணைக்களத்தின் வசம் உள்ள பயன்படுத்தப்படாத பல பழைய இயந்திர கருவிகள் மற்றும் இரும்புகளை விற்பனை செய்வதற்கு சர்வதேச ரீதியில் விலை மனுக் கோரலை அறிவிக்கவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னைய முறையின் ஊடாக சில உள்ளூர் நிறுவனங்களே மிகக் குறைந்த விலையில் இந்த இரும்பைப் பகிர்ந்தளிப்பதாகவும், எனவே இதனைத் தடுக்கும் வகையில் எதிர்காலத்தில் இந்தப் புதிய முறை பின்பற்றப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட ரயில் பெட்டிகள் தொடர்பில் சில தரப்பினர் கூறுகின்ற கருத்துக்கள் உண்மையல்ல எனவும், அவற்றின் துல்லியத்தன்மையை கண்டறிந்து எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இது தொடர்பான அறிக்கையை தயாரிக்குமாறு ரயில்வே பொது முகாமையாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# "பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் மறைமுக நோக்கம் எதுவுமில்லை"

கொழும்பு, ஏப். 26

மக்களின் உயிரைப் பாதுகாத்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் பயங்கரவாதமற்ற நாட்டை உருவாக்குவதே உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை அறிமுகப்படுத்துதற் கான நோக்கமாகும். இதில் வேறு எந்த மறைமுக நோக்கமும் இல்லை என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மகா சங்கத்தினருக்கு விளக்கமளித்துள்ளார்.

அதற்கமைய மகா சங்கத்தினர் உட்பட ஏனைய எந்தவொரு தரப்பினரும் திருத்தங்களை முன்வைத்தால் அவற்றை ஏற்றுக் கொள்ளத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாத்து தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் மற்றும் பயங்கரவாதமற்ற நாட்டை உருவாக்குவதே இந்த சட்ட மூலத்தின் நோக்கமாகும்.

# புலிகளின் தங்கத்தை தேடிய 7 பேர் கைது!

முல்லைத்தீவு, ஏப். 26

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் தங்கத்தை தேடிச் சென்ற 07 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட குழுவினரிடம், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பெறுமதியான பொருட்களை தேடுவதற்கு பயன்படுத்தப்படும் ஸ்கானர் இயந்திரமும் கண்டுபிடிக்கப்பட்டது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் புதுக்குடியிருப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழு ஆனந்தபுரம் பகுதியிலுள்ள வனப்பகுதியில் சோதனை நடத்தி சம்பந்தப்பட்ட குழுவினரைக் கைது செய்தனர்.

சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டபோது, நிலத்தை தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் பல கருவிகள் மற்றும் கார் ஒன்றும் அவர்களிடம் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவர் கிளிநொச்சி கொக்கிளாய் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், ஏனைய சந்தேக நபர்கள் அனைவரும் ஜாஎல, நீர்கொழும்பு, வெல்லம்பிட்டி மற்றும் களனி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வலி நிவாரணி மாத்திரைகள் உற்பத்தி நிலையம் சிக்கியது





கொழும்பு, ஏப். 26

கொழும்பு 15, மோதறையில் உள்ள சட்டவிரோத மருந்து உற்பத்தி நிலையமொன்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், அதன் உரிமையாளரின் வீட்டிலிருந்து மருந்து வகைகள் மற்றும் மருந்து உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் மூலப்பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உணவு மற்றும் மருந்துகள் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நபர் வலி நிவாரணி மாத்திரைகளை தயாரித்துள்ளதாகவும், இந்திய மருந்து வகைகளுக்கு நிகரான மருந்துகளை அவர் தயாரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரி விக்கப்பட்டது.

# குஷ் போதைப்பொருளுடன் ஒருவர் கொழும்பில் கைது!

கொழும்பு, ஏப். 26

கனடாவில் இருந்து அனுப்பப்பட்ட 84 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான 12 கிலோ குஷ் போதைப்பொருள் பேலியகொடையில் அமைந்துள்ள களஞ்சிய நிலையமொன்றில் கைப்பற்றப்பட்டதாக சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

பேலியகொடையில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றின் ஊடாக யாழ்ப்பாணத்தில் வசிக்கும் நபருக்கு கனடாவில் வசிக்கும் நபர் அனுப்பிய பொருட்கள் அடங்கிய 2 மரப்பெட்டிகளைச் சுங்க அதிகாரிகள் சோதனையிட்டபோது கவனமாக மறைத்து வைத்திருந்த 12 கிலோகிராம் குஷ் என்ற போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த மரப்பெட்டிகளில், 24 பொதிகளில் குஷ் போதைப்பொருள் வைக்கப்பட்டிருந்ததாகவும் சுங்கத்துறை தெரிவித்துள்ளது.

குறித்த போதைப்பொருளை சுங்கத்திலிருந்து விடுவிக்க உதவிய ஒருவரும் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டதாகவும், இந்தப் போதைப்பொருள் கையிருப்பின் மதிப்பு சுமார் 84 மில்லியன் ரூபா எனவும் சுங்கம் தெரிவித்துள்ளது. (அ)

## வடக்கு...

சேவை முற்றாக இயங்கவில்லை. இதனால் நகரங்களில் பேருந்து நிலையங்கள் சோபை இழந்திருந்தன. அரச பேருந்து சேவை இயங்கியபோதிலும் அதிகமான பேருந்துகள் வெறுமையாகவே பயணித்தன.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லாதமையால் அவையும் இயங்கவில்லை. தனியார் கல்வி நிறுவனங்களும் மூடப்படிருந்தன.

**மட்டக்களப்பில்...!**

மட்டக்களப்பில் பொது முடக்கப் போராட்டத்துக்கு பேராதரவு கிடைத்துள்ளது. வழக்கமாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளே ஹர்த்தால் போராட்டத்துக்கு ஆதரவளிப்பது வழக்கம். ஆனால், இம்முறை முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி பிரதேசங்களிலும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன.

தவிர தமிழ் மக்கள் அதிகம் வாழும் மட்டக்களப்பு நகரம், படுவான்கரை, கொக்கட்டிச்சோலை, வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி பிரதேசங்கள் வழமை போன்று முற்றாக முடங்கின.

**கிளிநொச்சி, மன்னார்**

கிளிநொச்சி, மன்னார் நகரங்களில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. சிறு நகரங்களின் கடைகளும், பொதுச் சந்தைகளும் கூட இயங்கவில்லை. பாடசாலைகள், தனியார் போக்குவரத்து சேவைகளும் இடம்பெறவில்லை. மன்னாரில் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளிலும் கடைகள் அடைக்கப்பட்டு போராட்டத்துக்கு ஆதரவு வழங்கப்பட்டது.

**முல்லைத்தீவு வவுனியா**

முல்லைத்தீவு நகரம், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை என அனைத்து நகரங்களிலும் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. இதேபோன்று வவுனியா நகரிலும் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் உட்பட அனைத்தும் முடங்கின. பாடசாலைகளும் இயங்கவில்லை.

எனினும், அரச பேருந்துகள் வழமை போன்று சேவையில் ஈடுபட்டன. இவ்வாறு சேவையில் ஈடுபட்ட பேருந்து ஒன்றின்மீது முல்லைத்தீவில் கல்வீச்சுக்கு இலக்கானமையும் குறிப்பிடத்தக்கது.

**திருகோணமலை**

திருகோணமலை நகரம் முற்றாக முடங்கிக் காணப்பட்டது. நகரத்தில் முஸ்லிம் மக்களும் கடைகளை பூட்டி ஆதரவு வழங்கினர். மற்றும்படி தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகள் முற்றாக முடங்கின. பாடசாலைகளும் இயங்கவில்லை. எனினும், போக்குவரத்து சேவைகள் பெருமளவில் பாதிக்கப்படவில்லை.

**அம்பாறையில்...!**

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் காரைதீவு, பாண்டிருப்பு , அக்கரைப்பற்று போன்ற பகுதிகளிலேயே ஓரளவு இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது. எனினும் கல்முனை, அக்கரைப்பற்று நகரம், மருதமுனை, சாய்ந்தமருது என முஸ்லிம் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் இயல்புநிலை பாதிக்கப்படவில்லை.

(ஐ -02 - 03 - 06- 04 - 07)

## நினைவேந்த...

பொன்னம்பலம்.

ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு,

அன்னை பூபதி அரசியல் காரணத்துக்காகவே உயிர்தியாகம் செய்தார். அவரின் சாவும் அரசியல் - அவரின் தியாகமும் அரசியல்.

அந்த அரசியலுக்கு நேர்மாறாக இருந்துகொண்டு, அன்னை பூபதியை நினைவுகூர்வதாக சொல்லிக்கொள்ளும் தரப்புகளுடன் நாம் சேர முடியாது.

இதைப்போலவே திலீபனின் சாவும் அரசியல். திலீபனின் நினைவிடத்தில் நாம் யாரையும் அஞ்சலிக்க வேண்டாம் என்று தடுக்கவில்லை. அவர் உயிரிழந்த அந்த நேரத்தில் நாம் விளக்கேற்றியபின்னர் ஏனையோரை அஞ்சலிக்குமாறு நாம் கூறினோம். ஆனால், அன்னை பூபதியின் நினைவு தினத்தில் பொதுக்கட்டமைப்பு என கூறிக்கொண்டு தாங்கள் மட்டும்தான் நினைவுகூரலாம் வேறு எவரும் நினைவு கூரக்கூடாது என்றார்கள். அன்று காலையில் அன்னை பூபதியை நினைவேந்த எந்த நிகழ்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மாலை 5 மணிக்கே அன்னை பூபதிக்கு நேர்மாறான கொள்கை கொண்டவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பொதுக் கட்டமைப்புகள் என்று சொல்பவர்கள் ஈழத்தமிழர்களுக்கு இந்திய அமைதிப் படை காலத்திலும் - இந்தியாவாலும் மேற்கொள்ளப்பட்டவற்றை மூடி மறைப்பதற்காக வந்தவை. அன்னைபூபதி நினைவேந்தலை தடுத்த பொதுக் கட்டமைப்பை சேர்ந்த சீலன் என்பவர் சொல்கிறார் 13ஆம் திருத்தத்தை நீங்கள் மட்டும்தான் எதிர்க்கிறீர்கள் என்று சொன்னார். இதுவரை நாம் முன்வைத்த குற்றச்சாட்டுகள் பிழைக்கவில்லை - சிலநேரம் நாம் முன்வைத்த குற்றச்சாட்டுகளை விளங்கிக் கொள்ள மக்களுக்கு சிறிது நேரம் எடுக்கும். ஆனால், பிழைக்கவில்லை.

திலீபன் அண்ணன் இந்திய அமைதிப் படைக்கும் இந்திய அரசுக்கு எதிராகவும் உயிரைத் தியாகம் செய்ய வேண்டி வந்தது. அதேமாதிரியான நிலைமையே அன்னை பூபதிக்கும் நடக்கிறது. ஆகவே, அந்த இரண்டையும் கைப்பற்றவேண்டும். முள்ளிவாய்க்கால் நினைவையும் கைப்பற்ற வேண்டும்... ஏன்? 13ஆம் திருத்தத்தை நிராகரித்ததால்தான் போராட்டம் தொடர்ந்து நடந்தது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஒற்றையாட்சியையும் 13ஆம் திருத்தத்தையும் நிராகரிக்கின்ற ஒரு நிகழ்வாக அடையாளப்படுத்தக்கூடாது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டும்தான் இந்த நினைவேந்தல்களை நினைவுகூரவேண்டும்.

தமிழர்களின் சரித்திரத்தை சிங்களவர்கள் மாத்திரம் மாற்றியமைக்கவில்லை. இந்தியாவுக்கு முகவர்களாக இயங்குவோரும், இலங்கை அரசின் முகவர்களும் மாற்றியமைகின்றனர் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## ஏ. எல். பரீட்சை...

சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டு பணிக்காக வழங்கப்படும் உதவித் தொகை போதாது எனக் கூறி ஆசிரியர்கள் விடைத்தாள் திருத்தும் பணியிலிருந்து விலகியிருந்தனர்.

இந்த நிலையில், ஆசிரியர்கள் கோரிய உதவித்தொகையை வழங்க கல்வி அமைச்சு சம்மதம் தெரிவித்ததையடுத்து, மீண்டும் விடைத்தாள் மதிப்பீட்டிற்கு செல்ல ஆசிரியர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். (ஐ)

## மாகாண...

கர் தலைமையில் நேற்று பாராளுமன்றம் கூடியது. இதன்போதே சுமந்திரன் எம்.பி. தனிநபர் பிரேரணையை முன்வைத் தார்.

1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தை திருத்தும் வகையில் இந்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலம் தனிநபர் சட்டமூலமாக முன்வைக்கப்பட்ட நிலையில் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இதற்கமைய குறித்த சட்டமூலத்தின் முதல் வாசிப்பு நேற்று நடைபெற்றது.

மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை சுமந்திரன் சமர்ப்பித்தவுடன் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அந்த சட்ட மூல திருத்தத்தை ஆதரித்து வழிமொழிந்திருந்தார். (ஐ)

## கடன்...

கள் மே மாதத்தில் உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் கூறியுள்ளார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே இந்தத் தகவலை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள பிரதான பிரச்னை கடன் மறுசீரமைப்பாகும். இதற்கான பேச்சுகளில் பிரான்ஸின் லசார்ட் நிறுவனம், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான கிளிபர்ட் ஹான்ஸ் நிறுவனம் , முத்தரப்பு பேச்சுகளுக்காக இந்திய, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் நிதி அமைச்சர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்குபற்றலுடன் மெய்நிகர் ஊடாக பல சுற்று பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய சர்வதேச நாணய நிதியம் , உலக வங்கி , மத்திய வங்கி , நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினரால் மே மாதமளவில் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் முறையான திட்டமிடலொன்று உருவாக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி அமைச்சரவையில் நம்பிக்கை வெளியிட்டார் என்றார். (ஐ)

## எக்ஸ்பிரஸ்...

நீதிமன்ற கட்டமைப்புக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்தமைக்கு அரசாங்கம் வெட்கமடைய வேண்டும் என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல அதிருப்தி தெரிவித்தார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, நாட்டின் நீதிமன்ற கட்டமைப்பு தொடர்பில் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்ட கருத்துக்கள் தவறானவை. சிங்கப்பூர் நாட்டில் வழக்கு தாக்கல் செய்வதன் அவசியத்தை குறிப்பிட்டு தேசதுரோகியாக விரும்பவில்லை. வழக்கு விவகாரம் தொடர்பில் வேண்டியவற்றை குறிப்பிட்டு வழக்கு நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டாம் - என்றார்.

இதைத் தொடர்ந்து, இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ உட்பட எதிர்தரப்பு உறுப்பினர்களான சந்திம வீரக்கொடி, அத்துரலியே ரத்ன தேரர் ஆகியோர் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தீர்க்க முடியாத பல பிரச்னைகளை தோற்றுவித்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் பாராளுமன்ற தெரிவு குழு ஒன்றை நியமித்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் - என்று வலியுறுத்தினர். (ஐ)

## ஹர்த்தால்...

அவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முக்கிய அம்சம் வருமாறு,

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் கலாசாரம் பண்பாடு, மற்றும் அவர்களது புராதன சின்னங்களை அழித்தொழித்து அவ்விடங்களில் புத்தகோயில்களைக் கட்டி, பௌத்த சமய திணிப்பை ஏற்படுத்துவதற்கு எதிராகவும் இலங்கை அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராகவும் தமது எதிர்ப்பை முழுமையாகப் பதிவு செய்யவும் தமது கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்ளவும் வட - கிழக்கில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் இத்தகைய மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தக் கோரியும் வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு நடத்திய பொதுமுடக்கமானது முழுமையாக வெற்றியடைந் துள்ளது.

தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய ஏழு கட்சிகள் ஒன்றிணைந்து முழுமுடக்கத்துக்கான கோரிக்கையை முன்வைத்திருந்தனர். இதற்கு ஆதரவாக முஸ்லிம் கட்சிகளும் எம்முடன் கைகோத்திருந்தனர். மேலும், இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக வட - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் சங்கங்கள், பொது அமைப்புகள், போக்குவரத்து நிறுவனங்கள், வர்த்தக சங்கங்கள் போன்ற அனைவரும் ஒன்றி ணைந்து இந்த பொதுமுடக்கம் வெற்றி பெற தமது முழுமையான ஒத்துழைப்பை நல்கினார்கள். புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற தமிழ் அமைப்புகளும் இலங்கையில் இருக்கின்ற மத நிறுவனங்களும் ஒன்றுபட்டு இந்தக் கண்டன நடவடிக்கைக்கு ஆதரவ ளித்திருந்தார்கள். இந்த பொது முடக்கத்துக்கு ஒத்துழைத்த அனைத்து மக்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி கூறிக்கொள்கின்றோம். (ஐ)

## ஹர்த்தால் கார...

சட்ட மறுப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம் - என்று தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வடக்கு கிழக்கில் இடம்பெறும் பௌத்த சிங்கள மயமாக்கலுக்கு எதிராக அந்த பிரதேச மக்கள் எதிர்ப்பை வெளியிடுகின்றனர். சமய வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்பட்டுள்ளதுடன், விக்கிரகங்கள் உடைக்கப்பட்டுள்ளன. நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் ஜனநாயகத்துக்கு எதிராக செயல்பாடுகளை தற்போது ஹர்த்தால் ஊடாக எதிர்ப்பு தெரிவிப்பதை போன்று வெகுவிரைவில் சட்ட மறுப்பு போராட்டத்தையும் முன்னெடுப்போம் - என்றார். (ஐ)

## ஓ. எல். பரீட்சையை...

வர்களும் உயர்தர கல்வியை ஆரம்பிப்பதற்கு தகுதியுடையவர்கள் என பரீட்சை திணைக்களத்தின் சான்றிதழை வழங்குங்கள் என்று சுதந்திர மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

க. பொ. த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக தற்போது பிரச்னை ஏற்பட்டுள்ளது. இதனால் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய 6 இலட்சம் மாணவர்கள் க. பொ. த. உயர்தரத்துக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வருடம் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதை பரிசீலியுங்கள். எனினும், பரீட்சை நடத்துவதற்கு பதிலாக அனைத்து மாணவர்களும் உயர்தர கல்வியை ஆரம்பிப்பதற்கு தகுதியுடையவர்கள் என பரீட்சை திணைக்களத்தின் சான்றிதழை வழங்குமாறும் கூறினார்.

மேலும், க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை வைத்து எவரும் வேலைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதே உண்மையாகும். இதன் மூலம் மாணவர்களுக்கு மீண்டும் அநீதி இழைக்கப்பட மாட்டாது.

பிரிட்டனில் கொரோனா தொற்றுநோய் பரவலின்போது இவ்வாறான தொரு தீர்மானம் எடுக்கப்பட்டது. இதன் விளைவாக மாணவர்களுக்கு பெரும் சலுகை கிடைத்தது. எனவே, எனது முன்மொழிவை பரிசீலிக்குமாறு அதிகாரிகளை கோருகிறேன் - என்றார். (ஐ)

## ஈஸ்டர்...

முழுமையான அறிக்கை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் கத்தோலிக்க ஆயர் பேரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் குருநாகல் மாவட்ட ஆயர் ஹெரல்ட் அன்ரனி ஆண்டகையிடம் குறித்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# எரிபொருள் கோட்டா மாறாது



கொழும்பு, ஏப். 26

பண்டிகைக் காலத்தில் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீடு மறு அறிவித்தல் வரை மாற்றம் இல்லாமல் நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கடந்த வாரம் வரை எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டதுடன், பின்னர் மேலும் ஒரு வாரத்துக்கு அது நீடிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தில், எரிபொருள் இறக்குமதி, முகாமை, விநியோகம் மற்றும் விற்பனை தரவுகளை ஆய்வு செய்த பிறகு, தற்போதைய எரிபொருள் ஒதுக்கீட்டு அதிகரிப்பை மறு அறிவித்தல் வரை நீடிக்க தீர்மானித்துள்ளதாக அமைச்சர் நேற்று ருவிட்டர் பதிவில் தெரிவித்தார்.

தற்போது, ஓட்டோக்களுக்கு 5 லீற்றரில் இருந்து 8 லீற்றராகவும், மோட்டார் சைக்கிள்களுக்கு 4 லீற்றரில் இருந்து 7 லீற்றராகவும், பஸ்களுக்கு 40 லீற்றரிலிருந்து 60 லீற்றராகவும், கார்களுக்கு 20 லீற்றரிலிருந்து 30 லீற்றராகவும், மண் அகழ்வு வாகனங்களுக்கு 15 லீற்றரில் இருந்து 25 லீற்றராகவும் எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அவ்வாறே பாரவூர்திகளுக்கு 50 லீற்றரிலிருந்து 75 லீற்றர் வரையும் சிறப்பு நோக்க வாகனங்களுக்கு 20 லீற்றரிலிருந்து 30 லீற்றர் வரையிலும், வேன்களுக்கு 20 லீற்றரிலிருந்து 30 லீற்றர் வரையும் எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பண்டிகைக் காலத்தில் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீட்டை மறு அறிவித்தல் வரை அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ)

# ஆளும் கூட்டணியின் 15 பேர் சீனா பயணம்

கொழும்பு, ஏப். 26

ஆசியாவில் அதிகரித்து வரும் புவிசார் அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில், இலங்கையின் ஆளும் கூட்டணியின் 15 தலைவர்கள் சீனாவுக்குச் சென்றுள்ளனர்.

இதில் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் அடங்குகின்றனர்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின் பேரில் இவர்கள் அங்கு சென்றுள்ளனர்.

சீனாவுக்குச் சென்ற குழுவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி யின் ஐந்து உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர்.

10 உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுனவை சேர்ந்தவர்கள்.

இந்த உறுப்பினர்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உறவினரான நிபுண ரணவக்கவும் ஒருவராவார்.

இவர்கள் ஒன்பது நாட்கள் சீனாவில் தங்கியிருப்பர் என்று கூறப்படுகிறது. இதன்போது அவர்கள் சீனாவின் இரண்டு மாநிலங்களுக்கு செல்லவுள்ளனர்.

சீனா சென்றுள்ள 15 பேர் கொண்ட குழுவில் இளம் அரசியல்வாதிகள் பலர் அடுத்த தேர்தலில் பங்கேற்கத் தயாராகி வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

குன்மிங் மற்றும் யுனான் மாகாணங்களுக்கு இலங்கை தரப்பு பயணம் செய்யவுள்ளது.

மாகாண தலைநகரங்களில் உள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

சீனாவின் நன்கு அறியப்பட்ட வறுமை ஒழிப்பு மற்றும் கிராமப்புற மறுமலர்ச்சித் திட்டங்கள் குறித்த கருத்தரங்கிலும் குழு பங்கேற்கும்.

குழு உறுப்பினர்கள் பல மாதிரிக் கிராமங்களுக்கு சுற்றுப்பயணம் செய்து அங்கு நவீன விவசாய முறைகளை கண்காணிக்கவுள்ளனர்.

பயணத்தின் இறுதிக்கட்டத்தில், தூதுக்குழுவினர் புஜியான் மாகாணத்திற்கும், அதன்பின் தலைநகர் பீஜிங்கிற்கும் பயணம் மேற்கொள்வார்கள். (அ)

# முல்லைத்தீவில் சேவையில் ஈடுபட்ட அரச பஸ் மீது கல் வீசித் தாக்குதல்!

முல்லைத்தீவு, ஏப். 26


**வடக்கு-கிழக்கு தழுவிய ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து அரச பஸ்கள் சேவையில் ஈடுபட்டன.**

முல்லைத்தீவு மாவட்ட சாலைக்கு சொந்தமான அரச பஸ் ஒன்று நேற்று அதிகாலை 5.30 மணியளவில் முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்த போது செல்வபுரம் பகுதியில் கல்வீச்சு தாக்குதலுக்கு இலக்காகியது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பஸ் மீது கல்வீசி தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது பஸ்ஸின் முன் கண்ணாடி சேதமடைந்துள்ளதுடன் சாரதியும் காயமடைந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து முல்லைத்தீவு சாலையில் இருந்து செல்லும் அனைத்து அரச பஸ்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. (அ)



# திட்டமிட்டபடி மே 29ஆம் திகதி சாதாரண தர பரீட்சை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 26

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை மே 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது நிறைவடைந்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சை நடைபெறும் திகதி குறித்து உரிய நேரத்தில் அறிவிக் கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல்கலைக்கழக பேராசிரியர்கள் உள்ளிட்டவர்களுக்கு இதில் பாரிய பொறுப்புக்கள் காணப்படுகின்றன.

வெளிநாடுகளில் 20 வயதுக்குள் டிப்ளோமா கற்கையை நிறைவு செய்யக் கூடியவாறான கல்வி முறைமையே காணப்படுகிறது.

ஆனால் இலங்கையில் இதற்காக 4 ஆண்டுகள் பல்கலைக்கழகத்தில் கற்க வேண்டியுள்ளது. எனவே சாதாரண, உயர் பரீட்சைகளும், பெருபேறுகளை வெளியிடலும் தாமதடைந்தால் அது மாணவர்களின் எதிர்காலத்தை பாரதூரமாக பாதிக்கும்.

இதனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பரீட்சைகள் ஆணையாளர் 24 ஆம் திகதி திங்கட்கிழமை விசேட கலந்துரையாடலை முன்னெடுத்துள்ளார்.

அதற்கமைய விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் வெற்றிகரமாக விரைவில் முழுமையாக ஆரம்பமாகும்.

தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக மாணவர்களை பயணக் கைதிகளாக்குவதை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்படக் கூடிய சகல முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ)

# தாய்லாந்தில் இலங்கையரிடம் 5,500 டொலர் பணத்தை கொள்ளையிட்ட பெண் சிக்கினார்!

கொழும்பு, ஏப். 26

தாய்லாந்தில் இலங்கை சுற்றுலாப் பயணி ஒருவரிடமிருந்த 5500 அமெரிக்க டொலர் பணத்தைக் கொள்ளையிட்ட பெண் ஒருவரை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர். தாய்லாந்தின் பங்கொக்கின் ஹூவாய் காஹாவங் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

30 வயதான இலங்கை சுற்று லாப் பயணி ஹோட்டல் ஒன் றில் மது அருந்திக்கொண்டி ருந்தபோது இந்த பெண் அறி முகமாகியதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இலங்கை சுற்றுலாப் பயணி குறித்த பெண்ணை தனது அறையில் தங்குமாறு அழைத் துள்ளார்.

காலையில் நித்திரை விழித்தபோது, அறையில் இருந்த 5500 டொலர் பணத்தை காணவில்லை என இலங்கையர் தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் பணத்தைக் களவாடியமைக்கான ஆதாரங்களையும் பொலிஸார் திரட்டியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு சுதந்திரக் கட்சியும் போர்க்கொடி!

கொழும்பு, ஏப். 26

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை எதிர்ப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

அக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச இந்த தகவலை வெளியிட்டார்.

பயங்கரவாதம் பற்றி சட்டமூலத்தில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை எனவும் அவர் கூறினார். (அ)

# ரணிலே அடுத்த பொது வேட்பாளர்?

கொழும்பு, ஏப். 26

அடுத்த ஜனாதிபதிவஹ் தேர்தலில் பொது வேட்பாளரைக் களமிறக்கி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வெற்றி வாகை சூடும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அந்த பொது வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவாகக் கூட இருக்கலாம் எனவும் அவர் கூறினார். ரணிலுக்கு உதவுவதற்கு தனிப்பட்ட ரீதியில் தான் தயார் எனவும் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

அத்துடன், பிரதமர் பதவியில் எவ்வித மாற்றமும் வராது எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# சபையில் வார்த்தைகளால் மோதிய சாணக்கியன் - சப்ரி!

கொழும்பு, ஏப். 26

பாராளுமன்றில் நேற்று தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையில் கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட போக்குவரத்துப் பிரச்னை குறித்து சாணக்கியன் கேள்வி எழுப்பியபோது, அதற்கு பதில் வழங்க தயார் இல்லை என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இந்த நிலையில், நல்லிணக்க முயற்சிகள் குறித்து அமைச்சர்களான அலி சப்ரியும், அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் வீரர்களாக காட்டிக்கொள்கின்றனர்.

எனினும் இந்த பாராளுமன்றத்துக்குள் நல்லிணக்க விடயங்கள் உரிய வகையில் பின்பற்றப்படவில்லை என்று சாணக்கியன் குறிப்பிட்டார்.

தமது மாவட்ட மக்களின் பிரச்னைகள் குறித்து பேசும்போது அது முக்கியத்துவம் அற்ற விடயம் என்று பிரதிச் சபாநாயகர் கூறுவதாகவும் சாணக்கியன் சுட்டிக் காட்டினார். இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் அலி சப்ரி, சாணக்கியன், இனவாத அடிப்படையில் செயற்படுவதாக குற்றம் சுமத்தினார்.

தாம் தனி இனம் ஒன்றுக்காக செயற்படவில்லை என்றும் முழு இலங்கையர்களின் நல்லிணக்கம் தொடர்பிலேயே செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது சாணக்கியனும் பிரதிவாதம் புரிந்த போதும் பாராளுமன்ற ஒலிவாங்கி அவருக்கு வழங்கப்படாமையால், அதனை தெளிவாக கேட்கமுடியவில்லை.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.